Registered as a Newspaper

பக்கங்கள் : பன்னிரெண்டு

# உதயன்

விலை ரூபா 10.00

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 06 வெள்ளிக்கிழமை (18.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :84



கிழக்குப் படுகொலைகளைக் கண்டித்தும் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கு அரசின் ஒதுக்கீடுகள் வழங்கப்படாமையை ஆட்சேபித்தும் பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. பதாதைகளைத் தாங்கியவாறு பேரணியில் கலந்துகொண்டோர் ஊர்வலமாகச் செல்வதையும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதி ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பிரபா, கவீதரன்).*

# ஐ.நா. செயலாளரிடம் இலங்கை ஆட்சேபம்!

## கௌசல்யன் கொலையைக் கண்டித்ததற்காக

கொழும்பு, பெப்ரவரி18

**விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராகவிருந்த லெப்ரினன்ட் கேணல் இ.கௌசல்யனின் படுகொலைகளை ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கண்டித்ததை இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக ஆட்சேபித்திருக்கின்றது.**

இலங்கை அரசின் ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி பேர்னாட் குணதிலக நேற்றுமுன்தினம் ஐ.நா.செயலாளர் நாயகத்தின் அலுவலகத் திடம் இலங்கை அரசின் உத்தியோகபூர்வ ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

மற்றைய பல நாடுகளினால் தடைசெய்யப்பட்ட ஒரு பயங்கரவாத இயக்கத்தின் உறுப்பினர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை ஐ.நா.செயலாளர் நாயகம் கண்டித்து, இரங்கல் செய்தி விடுப்பது முறையற்றது என இலங்கை அரசு தனது ஆட்சேபனையில் தெரிவித்திருக்கின்றது எனத் தெரியவந்தது.

மேற்படி கொலைகளை ஐ.நா. செயலாளர் கண்டித்ததைத் தேசப்பற்றாளர்களின் தேசிய இயக்கம், ஜே.வி.பி. போன்ற பௌத்த, சிங்களப் பேரினவாத அமைப்புகளே எதிர்த்துவந்தன.

ஐ.நா. செயலாளரின் கண்டன அறிக்கையை ஆட்சேபித்து இந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை மிக அண்மையில் அவரது அலுவலகத்தில் சந்தித்துத் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

அதேவேளை -

அவர்களது கருத்துக் குறித்து கவனத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாடுமுழுவதிலும் இன்று முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு.பெப்.18

கடற்கரையோரங்களில் 100மீற்றர் தூரத்தை பாதுகாப்பு வலயமாக அரசு பிரகடனப்படுத்தியிருப்பதை எதிர்த்து முஸ்லிம்கள் இன்று நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் கரையோரத்தில் 100மீற்றர் தூரம் வரை கட்டடங்கள் கட்டுவதற்குத் தடைவிதித்து உத்தரவு

(12ஆம் பக்கம் பார்க்க)

### வாசகர்களுக்கு!

எங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் திடீரென ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக உதயனின் பக்கங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

ஆதலால் பக்கங்களின் இலக்கங்களும் மாறி அமைந்துள்ளன. இவற்றைப் பொறுத்தருளுமாறு வாசகர்களை மிக்க அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

-நிர்வாகத்தினர்.

## நான்காவது நாளாக யாழ்ப்பாணத்தில் அரசுக்கு எதிராகக் கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம்.பெப்.18

யாழ். குடாநாட்டில் தொடர்ந்து நான்காவது நாளாக நேற்றும் அரசுக்கு எதிரான கண்டனப் பேரணி இடம்பெற்றது. பொது அமைப்புகள் இணைந்து இந்தப் பேரணியை நடத்தின.

கடந்த திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணத் தொழிற்சங்கங்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கண்டனப் பேரணியின் வரிசையில் நான்காவது இதுவாகும்.

யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம், யாழ். மாவட்ட வெண்மை வாணிப சங்க ஒன்றியம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம், கடற்றொழிலாளர் சம்மேளனம் ஆகியன இணைந்து இக்கண்டனப் பேரணியை ஒழுங்கு செய்திருந்தன.

இந்த அமைப்புகளைச் சேர்ந்தோர் நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் ஒன்று கூடி அரச அதிபர் கே.கணேஷிடம் அரசுக்கான மகஜரைக் கையளித்தனர். பின்னர் யாழ். செயலகத்திலிருந்து மாபெரும் கண்டனப் பேரணி ஆரம்பமாகியது. ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் என வயது வேறுபாடு இன்றி ஆயிரக்கணக்கான மக்கள் கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் அரசுக்கு எதிரான சுலோக அட்டைகளைத் தாங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்பு மங்களவிடமிருந்து கைமாறுகிறது

கொழும்பு.பெப்.18

ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்பு அமைச்சர் மங்கள சமரவீரவிடமிருந்து கைமாறுகிறது. இந்த அமைச்சுப் பொறுப்பை ஊடகத்துறையில் பரிச்சயமிக்க ஓர் அமைச்சரிடம் கையளிப்பதற்கு ஜனாதிபதி முடிவுசெய்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தூள்செய்யப்பட்ட 405 கிலோ கஞ்சா பொலீஸிடம் சிக்கியது

கொழும்பு.பெப்.18

தூள் செய்யப்பட்ட கஞ்சா 405 கிலோ இலங்கையில் முதன்முறையாகப் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 40 லட்சத்துக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டது.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் உள்ள களஞ்சிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் இவ்வாண்டே! அடம்பிடிக்கிறது ஐக்கிய தேசியக்கட்சி

கொழும்பு.பெப்.18

இந்த ஆண்டு இறுதியில் எப்படியும் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டே ஆக வேண்டும் என்று வலியுறுத்துகிறது ஐ.தே.க.

அரசமைப்பையும் மீறி தேர்தலை பிற்போட ஜனாதிபதி முயன்றாரானால் அதனை கட்சி அனுமதிக்காது; நாடு முழுவதும் மக்களைத்திரட்டி பாரிய போராட்டங்கள் நடத்தப்படும் என்கிறார் ஐ.தே.கவின் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட வீரர்கள் இருவர் தேசிய உதைபந்தாட்ட அணிக்கு!

### யாழ்.வந்த மணிலால் பெர்னாண்டோ தகவல்

யாழ்ப்பாணம் பெப்.18

இலங்கையின் தேசிய உதைபந்தாட்ட அணியில் யாழ்.மாவட்டத்திலிருந்து இரண்டு வீரர்களை உள்வாங்குவதற்கு ஆவன செய்யப்படவிருப்பதாக ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவரும், இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் முகாமைத்துவக்குழுத் தலைவரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டிப்பகுதியில் விபத்து: ஒருவர்பலி; இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்.பெப்.18

கிளிநொச்சி, பழைய முறிகண்டிக்கு சமீபமாக ஏ-9 வீதியில் இரு ஹண்டர் வாகனங்கள் மோதிக் கொண்ட விபத்தில் ஒருவர் பலியானார்; இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் 12.30மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கண்டி, அக்குறணையைச்சேர்ந்த ஏ.சி.எம்.றஸீம் (வயது 40) என்பவரேபலியானவராவார். அதேயிடத்தைச்சேர்ந்தவர்களான பி.எம்.முஸம்மில் (வயது 40), எஸ்.எம்.பாரிஸ் (வயது 28) ஆகியோர் படுகாய

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

நவாலி இளைஞர் கிறிஸ்தவ சங்கத்தின் (Y.M.C.A) பொதுச்செயலாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. தகுதியுடையோர் தங்கள் விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 21.02.2005. மேலும் விண்ணப்பதாரர் நவாலியை அல்லது அதனை அண்மித்த பகுதியை வசிப்பிடமாக்க் கொண்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
நவாலி Y.M.C.A.
நவாலி தெற்கு, மானிப்பாய்.
(42169)
அ.அதியதாசன்
தலைவர்



# கணக்காளர் தேவை

கணக்கியல் படித்தவர்கள் தேவை.
நேரில் வரவும்.
தொடர்பு:
சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்
இலங்கை வங்கி முன்பாக,
(42239) ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.



**மனோகரா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
இளையதளபதி விஜய் (சிறப்புதோற்றம்), நமீசா, ரவிகிருஷ்ணா, ரம்பா நடித்த
சுக்ரன்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30



# மாபெரும் கருத்தரங்கு

மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன்
U.K. இல் உயர் கல்வி மற்றும் தொழில்வாய்ப்புப் பற்றிய

காலம் : 20-02-2005 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிமுதல் 1.00மணிவரை

இடம் : யாழ். வீரசிங்க மண்டபம்

அனுமதிக் கட்டணம் ரூபா 100, பாடசாலை மாணவர்களுக்கு ரூபா50. அனுமதிகளை மண்டபவாயிலில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு இம்மாதம் 13 ஆம், 14ஆம் திகதிகளில் வெளிவந்த உதயனைப் பார்க்கவும். (C/41030)

பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டதால் உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்துங்கள்.



# விஞ்ஞான பீட 3ஆம் வருட மாணவர்களுக்கு

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மூன்றாம் வருட மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் (21.02.2005) அன்று (திங்கட்கிழமை) பிற்பகல் 4.00 மணிக்கு Batch Photo எடுப்பதற்கான சகல ஆயத்தங்களுடனும் எமது பீடத்திற்கு வருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அ.இராமலிங்கம்,
3ஆம் வருடப் பிரதிநிதி.
(42243)(43-11-45)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை
ரஜனி, அம்பிகா, சத்தியராஜ் நடித்த
நான் சிகப்பு மனிதன்
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.) (C/40667)



**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது
15.02.2005 முதல் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
தினசரி: 10.30. 2.30. 6.30.9.30. (பு.நே.)
**காதல்** என்னும் திரை ஓவியம் திரையிடப்பட்டுள்ளது.
**டைடானிக்** மறு அறிவித்தல் வரும்வரை காண்பிக்கப்படமாட்டாது.



# மரண அறிவித்தல்



## சரவணமுத்து நாகராசா

*(இளைப்பாறிய உத்தியோகத்தர் - பிரதேச சபை, நல்லூர்)*

பி...படியைப் பிறப்பிடமாகவும் கோணாவளை ஒழுங்...க, துர்க்கையம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட S.நாகராசா நேற்று (17.02.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அருட்சோதியின் அன்புக் கணவரும் அமரர்கள் சரவணமுத்து - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் அச்செழுவைச்சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலம் - கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் பிரபாகரன் (லண்டன்), பிரதீபன் (யாழ்.பல்கலைக்கழகம்), பிறேம்குமார் (சுகாதாரக் கல்வி அலுவலர், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கமலர் (கனடா), மகேஸ்வரி (புளியங்குளம்), காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (கெருடாவில்), சுப்பிரமணியம் (இ.போ.ச.), சுந்தரலிங்கம் (இ.போ.ச.) மற்றும் சகுந்தலா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற முத்தையா, கந்தையா (புளியங்குளம்), லீலாவதி (கெருடாவில்), கனகேஸ்வரி (ஈச்சமோட்டை) ஆகியோரின் மைத்துனரும் அருள்மணி (ஆசிரியை - வவுனியா), அருள்தேவி (தம்பாலை), சரஸ்வதி (அச்செழு), தெய்வேந்திரராசா (ஜேர்மனி), அருள்யோகம் (ஜேர்மனி), சிவராசகுமார், காலஞ்சென்ற இராமச்சந்திரன், கந்தசாமி, ஜெயக்குமார், ஜெயராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2005) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு பிற்பகல் 2.30 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோணாவளை லேன்,*
*துர்க்கையம்மன் கோயிலடி,*
*கொக்குவில் கிழக்கு.* (42247)

தகவல்:
...



# ஞாபகார்த்த ஆராதனை

மண்ணில் 11 ~ 11 ~ 1922



விண்ணில் 17 ~ 01 ~ 2005

## அமரர் சதாசிவம் நவரத்தினம்

(வதிரி - கரவெட்டி)

19.02.2005 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஞாபகார்த்த ஆராதனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
க.அருந்தவராசா (பொதுச் சுகாதாரப் பரிசோதகர், நகரசபை பருத்தித்துறை).

*அம்புலி ஓடை லேன்,*
*தும்பளை, பருத்தித்துறை.*
*T.P.:0776 704398*
(சி-41044) (43-11-45)



**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்



4 ஆவது வெற்றி வாரம்
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00. 3.00. 7.00. (பு.நே.)
21 ஆம் திகதி முதல் விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
(C/39654)



**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
அஜித், திரிஷா, மணிவண்ணன், வீசு நடித்த



ஜி (சினிமா)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)



# Certificate in Telecommunication Systems Engineering

குறுகிய காலத்தில் World Class தராதரம். City & Guilds International London (UK) Examination June 2005 இற்கான வகுப்புகள

**Course Contents:**
Computer Technology Mobile Radio-Cellular Phone PSTN - Radio -TV-Optical Fibre-Digital Net work & Data Communication

| நாள் | நேரம் | காலம் | நுழைவுத் தகுதி | ஆரம்பம் |
|---|---|---|---|---|
| சனி . ஞாயிறு | மாலை 4 - 6 மணி | 4 மாதம் | G.C.E. O/L G.C.E. A/L (Com/Arts) | 19.02.2005 |

01.03.2005 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

*Jaffna Technical Institute*
*T.P.:021 222 3335, 0112361587, 011 2506803*
*07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.*
(சி-41039) (43-11-348)



காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம் மலையாளபுரத்தில் புதிய கட்டப்பணியை மேற்கொண்டுவருகிறது. இக்கட்டடவேலை அபிவிருத்திப் பணிநிலைக்குள் தொழில் புரிய வல்லமையுடைய இருபாலாரும் நேர்முகத் தேர்வில் தோற்றலாம்.

# பணிநிலை

| | |
|---|---|
| 01. முகாமையாளர் | 01 |
| 02. மேற்பார்வையாளர் | 06 |
| 03. அலுவலர் | 01 |
| 04. தட்டெழுத்தாளர் | 01 |
| 05. கணக்குப் பதிவாளர் | 01 |
| 06. கொள்வனவாளர் | 02 |
| 07. களஞ்சியக்காப்பாளர் | 02 |
| 08. காவலாளி | 03 |
| 09. சாரதி | 04 |
| 10. வோட்டப்பம், ஜெனரேற்றர் இயக்குபவர் | 02 |
| 11. மேசன் ஒப்பந்தகாரர்கள் | 10 |
| 12. தச்சு ஒப்பந்தகாரர்கள் | 04 |
| 13. கூலித் தொழிலாளர்கள் | 50 |

நேர்முகத் தேர்வு: 21, 22, பெப்ரவரி, 2005
காலை 9.00 மணி முதல்
மாலை 4.00 மணி வரை.

இடம்: அறிவுச்சோலை - புதிய வளாகம்,
மலையாளபுரம், கிளிநொச்சி.

குறிப்பு:
உரிய தகைமையுடன் தேர்வில் நேரில் சமுகம் தரவும்.

நிர்வாகச் செயலகம்,
காந்தரூபன் அறிவுச்சோலை,
சிறுவர் இல்லம்.
(சி-41038)(43-11-45)


## விடைத்தாள் மதிப்பீடு

ஜி.சீ.ஈ.சாதாரண தரப்பரீட்சை தெரிவுப் பாடங்களின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இம்மாதம் 23 ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வேம்படி மகளிர் கல்லூரியிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் பத்துத் தினங்கள் இந்த விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி நடைபெறும்.

மதிப்பீட்டுப்பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை பரீட்சை ஆணையாளர் அனுப்பிவைத்துள்ளார். (எ-11)

## மாதகல் மீனவரின் கோரிக்கை

சுனாமி அனர்த்தத்தின் போது சேதமடைந்த மாதகல் துறை கடற்கரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மீன் பிடி படகுகளையும் கட்டுமரங்களையும் இலவசமாக திருத்தித் தருமாறு இப்பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ். மாவட்ட அரச அதிபரை கடிதம் மூலம் கேட்டுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கும் இக்கடிதத்தின் பிரதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ-135)


# 16.02.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200081419 இலிருந்து 200100559 வரை

சீட்டிழுப்பு இல. 1582

**30 49 63 70** சுப்பர் எண் **06**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.47,17,150/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 47,17,150/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 03 | 10,00,000/- | 30,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 31 | 5,000/- | 1,55,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 510 | 1,000/- | 5,10,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,632 | 500/- | 8,16,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 24,814 | 40/- | 9,92,560/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 23,565 | 20/- | 4,71,300/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,52,517 | 10/- | 35,25,170/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.99,70,030/-

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 56,59,200/-

தொடர் இல. 300072581 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 19 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

200095797-1-94
200096451-9-68
200087265-5-68
200083695-8-46
200092805-4-45

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முறைப்படி விபூதி அணிந்தால் கிடைக்கும் பலன்களோ அதிகம்

பொதுவாக நமது தமிழ் மக்கள் சமயப் பற்றுடையவர்கள். அதன்படி தாம் கடைப பிடிக்கின்ற சமயத்தைப் போற்றிவருபவர்கள்.

அவருள் நாம் கடைப்பிடிக்கும் சைவ சமயத்தை எடுத்துக் கொண்டால் பெரும்பான்மையானவர் விபூதியை மாத்திரம் பூசிக்கொண்டு சைவர் என்ற பெயரில் வாழ்கிறார்கள். ஆனால், அந்த விபூதியை எந்தத் திக்கை நோக்கி நின்று அணிய வேண்டும்? எப்படி அணிய வேண்டும்? அணியும் போது அணிபவர் சிந்தை எதை நோக்கியிருக்க வேண்டும்? என்பன பிரதானமாகக் கவனிக்க வேண்டியன. கண்ட திசை நோக்கி, கண்ட படி அணிதல் கூடாதென்பதை அணிபவர்கள் கட்டாயம் அறிய வேண்டியவராவர்.

### ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடை

இந்த விதமான பல சமய உண்மைகளை விளககியே நாவலர் பெருமான் எமக்குச் சைவ வினாவிடையை ஆக்கிவைத்துச் சென்றுள்ளார். நமது சைவத்தின் நெறிமுறைகளை அடக்கித் துல்லியமாக யாவரும் விளங்கும் படி அவர் முதலாம் சைவ வினாவிடையை எமக்கு எழுதி வைத்தார். இந்த சைவ வினாவிடையில்

1.கடவுளியல்
2.புண்ணிய பாவ இயல்
3.விபூதியியல்
4.சிவமூலமந்திரவியல்
5.நித்தியகருமவியல்
6.சிவாலய தரிசனவியல்
7.தமிழ் வேதவியல்

என ஏழு வகையான இயல்களை வகுத்து, விரித்துக் கூறியிருக்கின்றார்.

இந்த இயல்கள் ஒவ்வொன்றிலும், சைவத்தினைப் பற்றியும், நமது முழு முதலாகிய சிவபிரானைப்பற்றியும், சிவசத்தியாகிய உமாதேவியார் பற்றியும் திருக்குமாரராகிய விநாயகக கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள் பற்றியும் எழுதியுள்ளார். அஃதன்றி விதிக்கப்பட்டதாகிய புண்ணியங்கள் பற்றியும் விலக்கப்படவேண்டிய பாவங்கள் பற்றியும் எழுதியுள்ளார்.

## ஞானக்கதிர்

இதேவேளை, சைவர்களாகிய நாம் எமது சமயத்துக்கு அடையாளமாக அணியவேண்டிய விபூதி, உருத்திராக்கம் பற்றியும் எழுதியுள்ளார். இவற்றில் விபூதியே எமக்குப் பிரதானமானது. இந்த விபூதி, பசுவின் சாணத்தைக் காயவைத்து, சுட்டு எடுத்து, வாசனை மலர்களிட்டுப் பேண வேண்டியது. விபூதியின் பெருமையோ அளப்பரியது.

விபூதியை நாம், வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று, எம்பெருமானை நினைத்து சிவசிவ என உச்சரித்து சிறிது உச்சந்தலையிலிட்டு பின் நெற்றியில் இருகடைப் புருவங்களுக்கிடையில் பூசுதல் வேண்டும். இந்த விபூதியின் மகிமையைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், தாம் பாடிய திருநீற்றுப் பதிகத்தில் நன்றாக விவரித்துப் பாடியுள்ளார்.

### விபூதியின் மாண்பு

பாண்டியனது வெப்புநோயை விபூதியிட்டே அவர் மாற்றினார். விபூதியோ எத்தனையோ பெருமையுடையது. என்ன கருமம் செய்யினும் எங்கே போகினும் விபூதியை எடுத்துப் பூசிக் கொள்ளுதல் நமது சைவ மரபாகும். நமது தமிழ் மக்கள்அக்காலத்தில் விபூதியையிட்டே பொய நோயையும் நீக்கினர் என்பர். ஏன்? இக் காலத்திலும் சில சைவர்கள் விபூதியைப் பூசிப பல காரியங்களைச் செய்து வெற்றியீட்டியுள்ளனர்.

ஆலயங்களில், அந்தணர்கள் விபூதி தந்தால் இருகைகளாலும் வாங்கி அணிதல் வேணடும். சிலர் அணிந்த பின் எஞ்சிய விபூதியை அங்கே எங்கேயாவது போடுவர். ஆனால், சிலரோ

**முதுபெரும் புலவர் கலாபூஷணம்**
**வை.க.சிற்றம்பலம்**

எஞ்சியதைப் பத்திரமாக எடுத்து வைத்து வீட்டிலே பேணுவர். முறைப்படி விபூதியை நம்பி அணிபவருக்கு இறைவன் அருள்புரிவான்.

குரு மூலம் தீட்சை புரிந்தவர்கள் அது அதற்கேற்றபடியான மந்திரத்தைக் கூறி நெற்றி முதலிய இடங்களில் குறியிடுவர். சைவ சமயத்தவருக்கு அனுட்டானம் பார்த்தல் மிக இன்றியமையாதது. இந்த நிலை முற்றாக நமது நாட்டில் குறைந்து வருகிறது. சிலர் விரத காலங்களில் மாத்திரம் இதைக் கடைப்பிடிப்பர்.

### பாடசாலை வாயிலில் விபூதி, சந்தணம்

முற்காலத்திலே அதாவது, 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை பாடசாலைகளில் ஆசிரியரும், மாணவரும் விபூதியணிதலிலும் சிவ தீட்சை பெற்று அதைக் கடைப்பிடிப்பதிலும் தவறார். காலையில் பாடசாலைகளின் வாயிலில் விபூதி, சந்தணம் எல்லாம் வைத்திருப்பார்கள். விபூதி அணியாத மாணவர் ஆசிரியரின் தண்டனைக்கு ஆளாவர். ஐபபசி வெள்ளி, திருக் கார்த்திகைக் காலங்களில் பாடசாலைகளில் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் சிவ தீட்சை கேட்பர். ஆனால் இன்றோ! ஒன்றுமில்லை.

### அறநெறி போதிக்கும் பாடசாலைகள்

ஆயினும், இன்று கிராமங்கள் தோறும் அறநெறிப் பாடசாலைகளை நிறுவி இந்து கலாசாரத் திணைக்களம், சைவ வினாவிடையையும் நீதி நூல்களையும் கற்பித்துச் சைவத்துக்குப் புத்துயிரூட்டி வருவதை நாம் போற்ற வேணடியவராயுள்ளோம். இப்பாடசாலைகளை சைவாசிரியர்கள் மாலையில் விடுமுறை நாள்களில் பரிபாலித்து வருகின்றனர். சில ஓய்வுபெற்ற உத்தியோகத்தரும் தொண்டு புரிவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. செயல்முறை இல்லாவிடில் சமய வாழ்வு சித்திபெறாது. விபூதியன்றிச் சிவ சின்னமாகிய உருத்திராக்கத்தையும் நாம் அணிந்து பயன் பெறுவோமாக. ☆

# புலிக்கொடி தமிழ்த் தேசத்தின் கொடி அதை ஏற்றுவதில் தவறொன்றுமில்லை

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

மன்னார்,பெப்.18

தேசியக் கொடியைத் தமிழ்த் தேசம் பறக்க விடுவதில் எதுவித தவறும் இல்லை. இது தமிழ்த் தேசியத்தின் கொடி, புலிகளுடைய கொடி அல்ல. அதை ஏற்றுவது அமைதிக்கு எதிரான காரியமல்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார், மன்னார் ஆயர் வண.ராயப்பு ஜோசெப் அடிகளார். மன்னார் நகரில் நடைபெற்ற மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட ஆறுபேர் கொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து நடைபெற்ற கூட்டத்தில் ஆயர் உரை நிகழ்த்தினார்.

கொடியேற்றப்பட்டதற்குக் கூக்குரலிடுபவர்கள் அண்மையில் நடத்தப்பட்டுள்ள இக் கொலைகள் பற்றி ஒன்றும் பேசாமல் இருந்து வருகிறார்கள். இப்படியான கொலைகள் பெரும் இயற்கை அனர்த்தங்களின் மத்தியில் நடைபெற்றுள்ளன. இவைகள் கண்டிக்கப்பட வேண்டியவை இந்தக் கொலைகள் போரைத் தூண்டுவதற்கான முயற்சிகள் - என்றார்.

மன்னார் புலிகளின் அலுவலகம் மீது குண்டெறியப்பட்டதும் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டதும் இக் கூட்டத்தில் கண்டிக்கப்பட்டது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மன்னார் பஸ நிலையத்தில் ஒன்று கூடிக் கண்டனக் கூடடத்தில் கலந்துகொண்டனர்.

ஆயர் மேலும் தெரிவிக்கையில் -

இப்படியான ஆத்திரமூட்டல்களுக்கிடையிலும் புலிகள் பொறுமை காப்பதற்காக அவர்களைப் பாராட்டுகின்றேன். அமைதிச் செயற்பாடுகளைப் பின்தள்ளுவதற்குச் சில சக்திகள் முயற்சியெடுப்பதாகத் தெரிகின்றது. மாவீரர் தினத்தன்று தமிழ் மக்கள் தமிழ்ப் பகுதிகளில் புலிக்கொடியேற்றுகிறார்கள்.

ஆனால், இந்த அமைதியான நடவடிக்கைகளின் போது இராணுவம் தனது படைகளைக் கனரக ஆயுதங்களுடன் அனுப்பி ஆயுதம் தரிக்காத மக்களைத் தாக்குகிறது என்று கூறினார். (ப)



# தென்மராட்சி அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு முன்னெடுக்க ஏற்பாடு

தென்மராட்சி,பெப்.18

தென்மராட்சிப்பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் ஒன்றை நாளையும் நாளை மறுதினமும் நடத்துவதற்கு பிரதேசசெயலகத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் காலை 11.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் -

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்குக் கொடிகாமம் பிரதேச சபை மண்டபத்திலும் 11.30 மணிக்கு வரணி மகா வித்தியாலயத்திலும் கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன.

கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், கிராமப் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோர் முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களை இந்தக் கலந்துரையாடல்களில் முன்மொழியுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் கேட்டுள்ளார். (எ-117)

# மாதா அம்ரிதானந்த மாயி இலங்கை வருகை

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஆன்மீகத் தலைவியான மாதா அம்ரிதானந்த மாயி இலங்கையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 300வீடுகளைக கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளார். இந்த 300 வீடுகளும் அரசு கூறும் இடங்களிலேயே அமைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த அழைப்பின் பேரில் அவர் நேற்று இலங்கை வந்து சேர்ந்தார்.

நேறறு மாலை கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழில் பயிற்சிக்கு உதவும் அமைச்சில் செய்தியாளர்களை அவர் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உடனிருந்தார். இந்தியாவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஆன்மக வழியில் பல்வேறு சேவைகளை ஆற்றியவர் மாதாஜி. அதேபோன்று இலங்கையிலும் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆன்மீக வழியில் அவர்களுக்கு ஆறுதல் வழங்குவதே தனது நோககம் என்று மாதாஜி குறிப்பிட்டார். கிழக்கே அமபாறை மாவட்டத்திற்கும் தெற்கில மாத்தறைக்கும சென்று பாதிக்கப்பட்ட மக்களைத் தாம் சந்திககவிருப்பதாகவும் அவர் கூறினார்.(க-10)

# நாடகப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,பெப்.18

திருமறைக் கலாமன்றத்தின் 2005ஆம் ஆண்டுக்கான நாடகப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாடகக் கலையில் ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் இதற்கு விண்ணப்பிக்கலாம்,

அத்துடன், சிறுவர் கலைக்கூடத்திற்கும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. இதில் பிரிவு ஒன்றில் 5 தொடக்கம் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களும், பிரிவு இரண்டில் 11 தொடக்கம் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களும், பிரிவு மூன்றில் 15 தொடக்கம் 17 வயதுக்குட்பட்ட சிறுவர்களும் விண்ணப்பிக்கலாம்.

சிறுவர் கலைக்கூடமானது சிறுவர்களின் உடல், உள வளர்ச்சியை மனதில் கொண்டு அவர்கள் தமக்குரிய உரிமைகளுடன் கலை, விளையாட்டு போன்ற ஊடகங்களுக்கூடாக உருவாக்கம் பெறத்தக்கதாக இலவசமாகப் பயிற்சிகள் வழங்கப்படும்.

ஓவியக்கலை வட்டப் பயிற்சிக்கும் ஓவியக் கலையில் ஆர்வமுள்ளவர்களும், பயிற்சிகளைப் பெறவிரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி அனைத்துப் பயிற்சிகளுக்குமான விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் 'பொதுச்செயலாளர், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.' என்னும முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-13)

# பாதாள உலகத்தினர் என்று எவரும் நாட்டில் இல்லையாம்!

## பொலீஸ்மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு,பெப்.18

பாதாள உலகத்தினர் என்று கூறப்படுவோர் இங்கு யாரும் இல்லை. ஆயுதங்களை வைத்துக்கொண்டு சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளே உள்ளனர். அவர்களைத் துடைத்தெறிய வேண்டிய கடமை பொலீஸாருக்கு உண்டு என்கிறார் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ.

இது பற்றி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே பொலீஸ்மா அதிபர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களால் பொதுமக்களுக்கு நாளுக்கு நாள் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுவருகிறது. மக்கள் நிம்மதியாகத் தமது அன்றாடக் காரியங்களை ஆற்ற முடியாத நிலையிலுள்ளனர்.

கூலிக்காகக் கொலைசெய்வது, கப்பம் பெறுவது, ஆள்களைப் பணத்துக்காகக் கடத்திச் செல்வது, பொலீஸாருக்குத் தகவல் கொடுப்போரைச் சுட்டுக்கொல்வது, போதைவஸ்து கடத்துவது, விற்பனை செய்வது போன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடும் இந்தக் கும்பல்களின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதோடு, குற்றச் செயல்களை முற்றாக துடைத்தெறிய வேண்டிய கடமையும் கட்டாயமும் பொலீஸாருக்கு உண்டு. எனவே, அந்த நடவடிக்கைகளைப் பொலீஸார் செய்து வருகின்றனர்.

இலங்கை போன்ற சிறிய நாட்டில் ஏற்கனவே, ஒரு ஆயுதப் போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. இதற்கு நாடு முகங்கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்றபோது மூன்றாம் தரப்பு ஒன்று ஆயுதங்களை வைத்துக்கொண்டு சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது.

எனது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் இந்தச் சட்டவிரோதக் கும்பல்களின் செயற்பாடுகளை முற்றாகத் துடைத்தெறிய நடவடிக்கை எடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ - க)

# விடத்தல்தீவுக் கிராமத்தில் சமூக அபிவிருத்தித் திட்டம்

## புனர்வாழ்வுக் கழகம் நடைமுறைப்படுத்தும்

மன்னார்,பெப்.17

மன்னார் மாவட்டம் விடத்தல்தீவுக் கிராமத்தில ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் சமூக அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுளளது.

இத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்றன.

முதல் நிகழ்வாக தமிழர் புனர்வாழ்வுக கழகத்தினால் செயற்படுத்தப்படும் முன்பள்ளிக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் நடைபெற்றது. தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெற்றன.

இதேவேளை, ஆண்டான் குள கிராமத்திலும், முன்பள்ளிக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் மன்னார் மாவட்ட அரச அதிபர், 'நிகொட்' பிரதித் திட்டப்பணிப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர், ஆட்காட்டிவெளி பங்குத்தந்தை, பாடசாலை அதிபர், கிராம சேவையாளர், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமத்தில்

# நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பாவனைக்குக் காணி வழங்கப்பட்டது

வலிகாமம்தெற்கு,பெப்.18

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினால் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பாவனைக்கென கட்டுடையில் ஆறு பரப்புக் காணி கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விவசாய சம்மேளனத்தினரால் சுவீகரிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ள இக் காணியில் நீர்ப்பாசனத் திணைக்களம் தனது உப அலுவலகத்தை நிறுவுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத் திட்டப்பிரதிப் பணிப்பாளர் ஏ.சி.விநோதராசா தெரிவித்துள்ளார்.

வழுக்கியாற்றை அண்மித்த வலிகாமம் பகுதியில் காணப்படும் இக்காணியில் புதிய உப அலுவலகத்தை நிறுவுவதற்கான கட்டட வேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பகுதியில் உப அலுவலகத்தை நிறுவுவதன் மூலம் இலகுவான முறையில் நீர்ப்பாசனச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் மழைகாலத்தில் மழைநீர் சேகரிப்பு, குளத்துநீர் பயன்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொண்டு விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யமுடியும் எனவும் இப்பகுதி விவசாயிகள் பலரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (10-152)

# தனிமையில் இருந்த பெண்ணின் நகைகள் திருடர்களால் அபகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

தனிமையில் இருந்த வயோதிபப் பெண்ணின் வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அவரைத் தாக்கி மயக்கமடையச் செய்துவிட்டு அவர் அணிந்திருந்த 40ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 4மணியளவில் கொக்குவில், தலையாழிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பெண்ணின் தலையிலும் முகத்திலும் தாக்கிய திருடர்கள் அவரின் கழுத்தில் இருந்த இரண்டு பவுண் சங்கிலி மற்றும் கைகளில் இருந்த இரண்டு பவுண் நிறையுடைய காப்புகள் என்பவற்றையே திருடிச் சென்றுள்ளனர்.

சன நடமாட்டம் கூடிய அப்பகுதியில் இத் திருட்டு இடம்பெற்றுள்ளமை அப்பகுதி மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமாக பொற்பதி வீதியில் அமைந்துள்ள அரசியல்துறை அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. (10-86)

# கசிப்பு விற்பனை செய்தவருக்கு நீதிமன்றினால் அபராதம்

வலி.வடக்கு,பெப்.18

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவருக்கு மல்லாகம் நீதிமன்றம் ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

அபராதத் தொகையைக் கட்டத் தவறினால் மூன்று வருட கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் மன்று தெரிவித்துள்ளது.

மானிப்பாயில் உள்ள நலன்புரி நிலையம் ஒன்றைச் சேர்ந்த அல்பிரட் ஜீகிறிஸ்ரி என்பவரை மானிப்பாய் பொலீஸார் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

உரியவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இத்தண்டனை விதிக்கப்பட்டது.

மானிப்பாய் பொலீஸாரால் அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட மானிப்பாயைச் சேர்ந்த் தம்பிராசா இராசேந்திரம் என பவரும் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (10-86)

# மாதகலில் படகுகள் திருத்தும் நிலையம்

யாழ்ப்பாணம், பெப்.18

படகுகள் திருத்தும் நிலையம் ஒன்று மாதகல் பகுதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் நிலையத்தினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து திருத்த வேலைகளை யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் கண்ணன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ரமேஷ் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் ஆகியோர் உட்படபலர் கலந்துகொண்டனர். (10-78-95-202)

# முறைசாராக் கல்வி பரீட்சை முடிவுகள் வெளியாகின

அச்சுவேலி,பெப்.18

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி முறைசாரக் கல்விப் பிரிவு மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

ஆங்கிலம், தமிழ் சுருக்கெழுத்தும் தட்டச்சும் பாடநெறி, மனைப்பொருளியல் பாடநெறி ஆகியவற்றுக்குத் தோற்றிய மாணவர்கள் பரீட்சை முடிவினைப் பார்வையிடலாம் என அதிபர் அறிவித்துள்ளார். (8-11)


## தேவை

தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் மற்றும் கொம்பியூட்டர் டிசைனிங் தெரிந்த ஆண, பெண் இருபாலாரும் தேவை. 27-02-2005 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:
விள.இல. 2505,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(சி-41034)

## இறைச்சிக்கடை நடத்துதல்

01-03-2005 இலிருந்து வட்டுக்கோட்டை இறாத்தலடிச் சந்தையில் ஆட்டிறைச்சிக்கடை ஒன்று ஆரம்பித்து நடத்துவதற்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்டிறைச்சிக்கடை ஆரம்பித்து, நடத்துவது தொடர்பாக ஆட்சேபனை ஏதும் இருப்பின் 25-02-2005 இற்கு முன்னர் எழுத்து மூலம் வலி.மேற்கு பிரதேச சபைக்கு அறியத் தருமாறு பிரதேச சபைச் செயலாளர் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறார்.

(சி-41032)(26-45)


# சங்கக் கட்டடம் புனரமைப்பு

தென்மராட்சி,பெப்.18

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேதமடைந்த நான்கு கிளைக் கட்டடங்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

மாசார், புலோப்பளை, முள்ளிப்பற்று ஆகிய கிளைகளின் கட்டடங்கள் தற்போது புனரமைக்கப்பட்டு இயங்கத் தொடங்கியுள்ளதாகவும் சங்கத்தார் வயல் கிளையின் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்ட மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக் கட்டடங்களை சங்கத் தலைவர் சி.வதனராஜா திறந்து வைத்துள்ளார். (10-203-117)


## விசேட கழிவுக் கட்டணம்

வெளிநாடுகளில் வசிக்கும் (பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, லண்டன்) [ஐரோப்பிய நாடுகள்] உங்கள் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு அனுப்பவேண்டிய உணவுப் பண்டங்கள், உடுதுணிகள், அன்பளிப்புப் பொருள்கள் ஆகியவற்றை மிகவும் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் எம்மூலம் அனுப்பிவைக்கலாம்.

| கட்டண விவரம் | பெறுமதி |
|---|---|
| 1. ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, லண்டன்) | 1kg - ரூ.1000/- |
| 2. கனடா | 1kg - ரூ.1000/- |

வான் சேவை

1. யாழ்ப்பாணம்/கொழும்பு கட்டணம் ரூ.1000/- மட்டும்

தொடர்புகளுக்கு:

Rainbow Travel & Tours (முதலாம் மாடி)
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 021 222 3918
(சி-41036)(26-14-45) (அபிநயா நகைமாடத்திற்கு மேல்)


# எங்கள் பலத்தில்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆற்றல்களையும், திறன்களையும் மேம்படுத்துவதே அபிவிருத்தித் திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டமானது இடம்பெயர்நது மீளக்குடியேறிய கிராமப் பெண்களின் உடல், உள, பொருளாதார மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு தென்மராட்சியினை மையப்படுத்திய நிலையில் 20 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு திட்டமானது செயற்படுத்தப்படுகின்றது. உதவித் திட்டம், என உதவிக்கரம் நீட்டிச் செல்லும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவித் திட்டங்கள் யாவும் விழலுக்கிறைத்த நீராய் பயனற்றுப் போயுள்ளன. காரணம் திட்டமிடப்படாத செயற்பாடு என்றே கூறலாம். இங்கு நடைமுறைப்படுத்தப்படும் துரித அபிவிருத்தி என்பது தேவையான மக்களுக்கு அதிலும குறிப்பாக பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் தேவைகளை பூர்த்திசெய்துள்ளதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. உதவியைப் பெறும் மக்கள் எந்தளவில் அவற்றின் பயனைப் பெறுகின்றனர் என்ற கேள்வி எழுமிடத்து அங்குதான் பெண்ணின் சமூக நிலைமை துலல்யமாக வெளித் தெரிகின்றது.

அந்தவகையில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன பெண்கள் அபிவிருத்தித் திட்டமானது கிராமங்களின் மாதர் சங்கங்களினூடாக சிறு சிறு கைத்தொழில் குழுக்களை உருவாக்கி அவர்களுக்கான தொழில் முயற்சிக்கு நிதி வழங்கும் நோக்கில் நிதி சேகரிக்கும் திட்ட நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டுள்ளன. மேற்படி நோககத்திற்காக தே.தேவானந்தின் *"பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்."* என்னும் நாடகத்தினை யாழ. பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 23.02.2005 அன்று காலை 10.30, பிற்பகல் 3.30 மணிக்கு மீண்டும் மேடையேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வின் மூலம் சேகரிக்கப்படும் நிதியானது பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அப்பெண்களுக்கு உதவித்திட்டமாக சென்றடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது சொந்த உழைப்பில் தாமே வருமானத்தினை ஈட்டுவதற்கு சுயதொழில் ஒன்றினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் விளைவாக வருமான அதிகரிப்பையும் அவர்கள் மனதில் நம்பிக்கையினை நாம் வலுவூட்டவும், மேம்படுத்தவும் "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" எனும் நாடக நிகழ்வு மூலம் நிதியினைத் திரட்டிப் பாதிக்கப்பட்ட 20 கிராமங்களினதும் மாதர் சங்கங்களினூடாக நிதியினை வழங்கி அவர்களது எதிர்காலத்திட்டத்தினை வளம்படுத்திக் கொள்ளும் முயற்சியினை மேற்கொண்டுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமானது மேறபடி நிகழ்விற்காக மக்களிடமிருந்தும், தனியார் நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் ஏனைய நன்கொடையாளர்களிடமிருந்தும் கலை நிகழ்ச்சிகள் நடத்திப் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிதியினைத் திரட்டிவருகின்றது. எனவே, இத்திடடத்திற்கு தங்களின் மேலான ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்றோம். ★

ஊடக அனுசரணை:
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# கிறீன்பலஸ் எம்போறியம்

மலிவு
விலை தானா?
என்பதை
அறிந்துகொள்ள
வீடு செல்லுமுன்
ஒரு முறை விஜயம்
செய்து பாருங்கள்.

யாழ்நகரில்
குறைந்த விலையில்
நிறைந்த ரகங்கள்!
நிகரில்லா தரங்கள்! அழகிய
புடைவைத் தினிசுகளின்
சாம்ராஜ்யம்

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## நீதியின் பணி முடிந்துவிட்டதா?

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது பெற்றோரிடமிருந்து அடித்துச் செல்லப்பட்ட அபிலாஷ் என்ற நான்கு மாதக் குழந்தை அதன் பெற்றோர்களிடம் - சட்டரீதியாக அடையாளம் காணப்பட்டு - ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இந்த விவகாரம் குறித்து ஊடகங்களில் தொடர்ந்து வெளியான தகவல்களை உள்வாங்கி, அதனால் குழப்பிப்போயிருந்த மக்களுக்கு, இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டதால் மன ஆறுதல், நீதி செய்யப்பட்டிருக்கின்றது, நிலை நாட்டப்பட்டிருக்கின்றது என்று மனத்திருப்தி.

ஆனால், விடயம் இத்துடன் முடிந்துவிட்டது என்று கோவையை மூடும் விடயம் அல்ல இது என்பது கவனிக்கப்படவேண்டும். இந்தக் குழப்பங்களின் பின்னணி குறித்து நீதித்துறை சற்று ஆழமாக நோக்க வேண்டும் என்பதுதான் இப்போது சுட்டிக்காட்டப்படும் அம்சமாகும்.

நீதி செய்யவும், நீதியை நிலைநிறுத்தவும் சில ஒழுங்கு முறைகள் இருக்கின்றன. சில சட்டங்கள், விதிகள், நடைமுறை மார்க்கங்கள் இருக்கின்றன. நீதித்துறைக்கு அவற்றைச் சுட்டிக்காட்டி, நினைப்பூட்ட வேண்டும் என்ற தேவை இல்லை. அது தனது பணியைத் தன்பாட்டில் செய்யும்.

ஆனாலும், சில விசேட - குறிப்பிடத்தக்க - நிகழ்வுகளின்போது அல்லது இக்கட்டு சமயங்களின்போது இயற்கை நீதியைத் தனக்கு வழிகாட்டியாக வைத்துக் கொண்டு நீதித்துறை நெகிழ்வுப் போக்கைக் காட்டி வருவது உலக நீதித்துறை வரலாற்றில் சிறப்புமிகு அம்சமாகும்.

உதாரணத்துக்கு நாம் அதிக தூரம் போகத்தேவையில்லை. இந்த ஆழிப்பேரலை அனர்த்த நிகழ்விலேயே நீதித்துறையின் நெகிழ்வுப்போக்கை - யதார்த்தத்துக்கு ஏற்ப தன்னை ஒழுங்குபடுத்துகின்ற நீதித்துறை செயன்முறையை - நாம் அவதானிக்கலாம்.

வழக்கமாக ஒருவர் அகாலமரணமடைந்தால் அந்த மரணம் தொடர்பாக நீதித்துறை நடவடிக்கைகளுக்கு ஒரு வரன்முறை, ஒழுங்கு இருக்கின்றது. பிரேத பரிசோதனை, மரண விசாரணை ஆகியவை நடத்தி மரணச்சான்றிதழ் வழங்கப்படும். அதன் பின்னரே சடலம் எரிக்கப்படவோ அல்லது புதைக்கப்படவோ முடியும்.

ஆனால், ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது இவை எல்லாம் சாத்தியமாகவில்லை. பிரேத பரிசோதனை இல்லை. பல சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை. நீதித்துறை அதிகாரிகள் அவற்றைப் பார்க்கவில்லை. அவற்றை அடையாளங்காண மரபணுப் பரிசோதனைகள் நடத்தப்படவில்லை. அகப்பட்ட இடங்களில் அவை எரிக்கப்பட்டன அல்லது புதைக்கப்பட்டன. பல சடலங்களில் சில அவயவங்கள் மாத்திரமே கிடைத்தன. இப்படிப் பல குழப்பங்கள்.

சில வெளிநாட்டவர்களின் சடலங்களை அடையாளம் காண்பதற்கு மட்டும் மரபணுப் பரிசோதனை நடத்தப்பட்டது வேறு விடயம்.

ஆனாலும், நீதித்துறை சுதாகரித்துக்கொண்டு, நிலைமைக்கு ஏற்ப தன்னை நிலைப்படுத்தி, வெறும் சத்தியக்கடதாசிகளை வைத்துக்கொண்டு மரணச் சான்றிதழ்களை வழங்கத் தயாராகிவிட்டது. இதற்கு வழி செய்யும் சட்டத்திருத்தம் ஏதும் நாடாளுமன்றத்துக்கு வரமுன்னரே யதார்த்த நிலைமைக்கு ஏற்ப நீதித்துறை நெகிழ்ந்து நடந்துகொண்டுள்ளது.

இந்தப் போக்கு 'சுனாமி -81' என்று அழைக்கப்பட்ட குழந்தை அபிலாஷின் விடயத்தில் மட்டும் ஏன் பின்பற்றப்படவில்லை என்பதுதான் பலரது மனதையும் குடையும் வினா.

குழந்தை அபிலாஷின் பெற்றோரை மரபணு ரீதியாக அடையாளம் கண்டு உறுதிப்படுத்திய பின்னரே குழந்தையை அவர்களிடம் ஒப்படைப்போம் என்பதில் உறுதியாக இருந்த நீதித்துறை பின்வரும் விடயங்கள் குறித்து என்ன கவனம் எடுத்தது என்பதை அறிய பொது மக்கள் எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றாகள்.

★ இந்தக்குழந்தை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு எட்டு நாள்களின் பின்னர் - அங்கிருந்து குழந்தை காணாமற் போயிருப்பதாக அதன் பெற்றோர் பொலீ ஸில் முறைப்பாடு செய்யும் வரை- தேசிய குழந்தை பாதுகாப்பு அதிகாரிகளுக்கோ பொலீஸாருக்கோ தகவலோ, முறைப்பாடோ செய்யாமல் வைத்தியசாலை நிர்வாகம் குழந்தையை ஒளித்து வைத்திருந்தது ஏன்?

★ பலர் இக்குழந்தைக்கு உரிமைகோருகிறார்கள் என்ற புரளி வைத்தியசாலை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கிளப்பி விடப்பட்டது எங்ஙனம்? ஜெயராஜ் - ஜெனிற்றா தம்பதியரைத் தவிரவேறு யாருமே குழந்தைக்கு உரிமைகோரி நீதிமன்றத்திடமோ, பொலீஸாரிடமோ செல்லவில்லை. அப்படியிருக்க, அப்படி ஒருசர்ச்சை இருப்பது போன்று காட்டி குழந்தையைப் பெற்றோர் பெறாமல் தடுத்துவைக்கும் செயற்பாடு - இழுத்தடிப்புக்கு - வழிசெய்யப்படக்காரணம் யார் ?குழந்தை ஒப்படைப்பு ஏற்பாட்டில் சட்ட ஏற்பாடுகளைத் தூக்கிப் பிடிக்கும் வைத்தியசாலை நிர்வாகம் வைத்தியசாலையில் இருந்த சிசுவை ஒரு தாதி அம்பாறைப் பகுதியில் உள்ள தனது வீட்டில் 'பாதுகாப்புக்காகக்' கொண்டு சென்று சில தினங்கள் வைத்துப்பேணும் - சட்டத்துக்கு முரணான-செயற்பாட்டுக்கு வழிகாட்டியது எங்ஙனம்?

சர்ச்சையே இல்லாத ஒருவிடயம் இங்கு சர்ச்சையாக்கப்பட்டு நீதித்துறைக்குத் தலையிடி கொடுக்கப்பட்டதாகவே பொதுவான அபிப்பிராயம் நிலவுகின்றது. ஆழிப்பேரலை அனர்த்தம் போன்ற விவகாரங்களில் சர்ச்சைக்குரிய விடயங்களையே நீதித்துறை சுமுகமாகத் தீர்க்கும் போது இதில் மட்டும் வீண் சர்ச்சை கிளப்பப் பட்டது ஏன்?

- மக்கள் மனதைக் குடையும் இக்கேள்விகள் நீதித்துறைக்குச் சமர்ப்பணம்.

---

### சுனாமியால் சேதமடைந்த

## ஆழியவளைப் பாடசாலையில் புதிய கட்டடம் அமைக்க ஜப்பான் 'ஜெய்கா' நிதியுதவி

யாழ்ப்பாணம்,பெப்.18

சுனாமியால் அழிவடைந்த பாடசாலை ஒன்றைப் புனரமைப்பதற்கென யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள ஜப்பான் சர்வதேச சமூகத்துக்கான அமையப் (ஜெய்கா) பிரதிநிதிகள் குழு நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே.கணேசைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

வடமராட்சி ஆழியவளையில் சுனாமியால் அழிவடைந்த ஆழியவளை சி.சி.த.க. பாடசாலையினைப் புதிய இடத்தில் அமைப்பதற்கு உதவுவதாகவும் அதற்கான செயற்றிட்ட வரைபுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தொலைவில் இப்புதிய பாடசாலை அமைப்பதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இக்குழுவினர் அரச அதிபரிடம் தெரிவித்ததுடன், அது தொடர்பான மேலதிக விவரங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இக்குழுவினர் நேற்று மருதங்கேணி உதவி அரச அதிபரையும் சந்தித்து இது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

இப்பாடசாலையின் புதிய கட்டடப் பணிக்கான முழுச் செலவையும் 'ஜெய்கா' நிறுவனமே வழங்கவுள்ளதாக அக்குழுவினர் தெரிவித்தனர்.


யாழ். செயலகத்தின் முன்னால் ஜெய்கா நிறுவனப் பிரதிநிதிகள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: பிரபா)

அடுத்த மாத இறுதிப் பகுதியில்கட்டட வேலைகள் ஆரம்பமாகுமென்றும் 'ஜெய்கா' நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு மாகாண புனரமைப்புத் திட்டத்தின் இணைப்பாளர் நிஷிமறு ஷு தெரிவித்தார். (8-13)

---

## பராமரிப்பு வேலைகளுக்காக 6 நாள்கள் மின்சாரம் தடைப்படும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட தினங்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை குடாநாட்டில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

நாளை சனிக்கிழமை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் -

எதிர்வரும் 26ஆம் திகதி உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி ஆகிய இடங்களிலும் -

அடுத்த மாதம் 5ஆம் திகதி இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணப்பட்டினம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய இடங்களிலும் -

அடுத்த மாதம் 12ஆம் திகதி புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் -

அடுத்த மாதம் 19ஆம் திகதி சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை ஆகிய இடங்களிலும் -

அடுத்த மாதம் 26ஆம் திகதி குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சாரசபையின் யாழ். பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது. (10-202)

---

## உயர்தரப் பரீட்சைக்கு இனிமேல் பாடங்கள் இரண்டாகக் குறையலாம்

கொழும்பு,பெப்.18

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ள 3 பாடங்களின் எண்ணிக்கையை இரண்டாக வரையறுப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய இரண்டு பாடங்களைக் கட்டாயமாக்குவதற்கும் மேலுமொரு பாடத்தைத் தமது விருப்பத்திற்கேற்ப மாணவர்கள் தெரிவு செய்துகொள்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பாடத்தொகுதி (Subject Basket) அறிமுகப்படுத்தப்படவுள்ளது இப்புதிய திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இசுறுபாயாவிலுள்ள கல்வியமைச்சில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தேசிய கல்வி ஆணைக்குழு, பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வியமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர்.

இதற்கமைய விஞ்ஞான பாடங்கள் இரண்டைப் பயிலும் மாணவரொருவர் மூன்றாவது பாடமாக சங்கீதம், வர்த்தகம் ஆகியவற்றில் ஒன்றைத் தெரிவு செய்யமுடியும்.

இது தொடர்பாகப் பல்கலைக் கழகங்களின் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளதாகப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (10-206)

---

## சுறா மீன்களின் 'சீசன்' ஆரம்பம்

அரியாலை,பெப்.18

குருநகர் மீன்சந்தையில் சுறா மீன்களின் விற்பனை அதிகரித்துள்ளது.

தற்போது சுறா மீன்களின் 'சீசன்' ஆகையால் தினமும் இந்த மீன்கள் குருநகர் மீன் சந்தைக்கு விற்பனைக்காக எடுத்துவரப்படுகின்றன.

ஆறு அடி நீளமுள்ள சுறா மீன்கள் ரூபா 10 ஆயிரம் முதல் 15ஆயிரம் ரூபா வரை நேற்றும் நேற்றுமுன்தினமும் விற்பனை செய்யப்பட்டன. (10-17)

---

## மாணவருக்குப் பணம் வைப்பிட சமுர்த்தி வங்கிகளில் ஏற்பாடு

தென்மராட்சி,பெப்.18

தென்மராட்சிப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 100 மாணவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் அந்தந்த சமுர்த்தி வங்கிகளில் வைப்பிலிடப்படவுள்ளது.

தென்மராட்சி சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஊனமுற்ற மாணவர்கள் மற்றும் குடும்பத்தலைவனை இழந்த குடும்பங்கள், கணவனால் கைவிடப்பட்ட குடும்பங்கள், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் ஆகியவற்றில் 18 வயதுக்குக் குறைந்த மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு இத்தொகை வைப்பிடப்படவுள்ளது.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட சமுர்த்தி கொடித்தினத்தில் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் -

கொடித்தினத்தில் ஒவ்வொரு வலயத்திலும் சேகரிக்கப்பட்ட நிதியை அடிப்படையாக வைத்து மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி, வரணி ஆகிய நான்கு சமுர்த்தி வலயங்களிலிருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (10-117)

---

### நாளை

மாசி 07
சனிக்கிழமை
19.02.2005
திதி : ஏகாதசி
பின் இரவு : 03.45
நட்சத்திரம் : திருவாதிரை
பின் இரவு 04.52
பீம ஏகாதசி விரதம்
சுபநேரம் : 3.32 - 5.02
ராகுகாலம் : 09.32 - 11.02
(யாவும் பழைய நேரப்படி)

---

## 'நெஞ்சு கனக்கும் நினைவுகள்' கவிதைத்தொகுப்பு அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் எழுதப்பட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் 'நெஞ்சு கனக்கும் நினைவுகள்' என்னும் கவிதைத்தொகுப்பு நூலின் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செ.செல்வகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வாழ்த்துரையினை நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும், சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் அறிமுகவுரையினை வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்துவார். தொடர்ந்து பேராசிரியர் சு.மோகனதாஸ் நூலினை வெளியிட்டு வைக்க முதல் பிரதியை யாழ்., நல்லூர் கோட்டத் தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியத்தலைவர் சரா. புவனேஸ்வரன் பெற்றுக்கொள்வார்.

சிறப்பு நிகழ்வாக கவியரங்கம் இடம்பெறும். (10-13)

---

### உதயவாக்கு

எப்போதும் உண்மையே பேசினால் எவற்றையும் ஞாபகப் படுத்திக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலம் பேச்சுப் பயிற்சி
(Spoken English)

* ஆங்கிலத்தில் அடிப்படை அறிவே இல்லாதவர்கள் கூட தேர்ச்சிபெறும் வகையில்...
* ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனமெடுத்து விசேடமாகக் கற்பிக்கப்படும் வகையில் வழவமைக்கப்பட்ட...

**Diploma in English**

சான்றிதழ்க் கற்கைநெறி - புதியபிரிவு

Weekend (சனி. ஞாயிறு) Classes

**Batch IX ஆரம்பம்: 19-02-2005**

சனி காலை 8.30மணி

வாரத்தின் அனைத்து நாள்களிலும் காலை 6.00 மணிமுதல் மாலை 8.30 வரை நீங்கள் விரும்பிய நேரத்தில் புதிய விசேட வகுப்புகளையும் ஒழுங்குசெய்துகொள்ளலாம்.

(C/41029)

LONDON ENGLISH COLLEGE
#105, Arasady Road, Jaffna
(யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில்).
Hotlines: 021-2225889, 0777252180, 0776910072



## கேணல் சங்கர் உடல் வலுவூட்டல் நிலையம
Colonel Shankar Mega Gym.
Body Care & Fitness Centre
யாழ்.சாலை கிளிநொச்சி.

நாளை (19-02-2005) சனிக்கிழமை முதல் செயற்படவுள்ள மேற்படி நிலையத்தில் பயிற்சி பெற விரும்புபவர்கள் பயிற்றுநர் திரு.வீ.தேவராஜாவுடன், இளையோர் செயற்பாட்டு நிறுவன அலுவலகத்தில் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

"வலுவான உடலே. வாழ்வின் முதன்மையான சொத்து"

(C/40965) (21-11-45-24)


**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வேலணைப் பிரிவு**

## அலகு இல. 1 வேலணை
## அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம்

இடம்: சரஸ்வதி வித்தியாசாலை. வங்களாவடி. வேலணை
காலம்: **27.02.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி**

வேலணை, சரவணை (J/12 _ J/21) பிரிவுகளைச் சேர்ந்த சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**இ.சற்குருநாதன்** கௌரவ செயலாளரும், அலகின் தற்காலிக செயலாளரும்
**ஆ.சபாநாதன்** கௌரவ தலைவரும் அலகின் தற்காலிக தலைவரும்

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வேலணைப் பிரிவு**

## அலகு இல. 3 அல்லைப்பிட்டி
## அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம்

இடம்: பராசக்தி வித்தியாசாலை. அல்லைப்பிட்டி
காலம்: **27.02.2005 பிற்பகல் 3 மணி ஞாயிற்றுக்கிழமை**

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பிரிவுகளைச் சேர்ந்த சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

| ச.விநாயகமூர்த்தி | ஆ.சபாநாதன் | சி.இரத்தினேஸ்வரன் |
|---|---|---|
| அலகின் தற்காலிக தலைவர். | கௌரவ தலைவர். | அலகின் தற்காலிக செயலாளர். |

(42209) (24-11-45)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 29 05 1954 — உதிர்வு 19 01 2005



# அமரர் கந்தையா சுந்தரமூர்த்தி

அன்பெனும் விளக்கேற்றி
அறம் காத்த அன்புருவே!
நாள்கள் தான் முப்பத்தொன்றாயினும்
ஆறவில்லை எம் துயர்
நீண்டதோர் சோகமாய் நிலைத்திட வைத்தீர்
கொண்டதோர் அன்பால்
எங்கு பார்த்தாலும் உங்கள் திருமுகம்தான் தெரிகிறதே!
ஐயா, உம் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

இன்று (18-02-2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (42225) (26-16-24)

அறுகம்புலம், காரைநகர். - குடும்பத்தினர்.

## நடனப் பயிற்சி

வரணி,பெப்.18

வரணி கலாமன்ற மண்டபத்தில் பிரதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அப்பகுதி மாணவர்களுக்கு நடனப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

நடன ஆசிரியை திருமதி கருணாகரன் கமலேஸ்வரியினால் அளிக்கப்பட்டுவரும் இந்த நடனப் பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெறவிரும்பும் மாணவர்களும் இணைந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-203-170)

## நல்லூர் யாக்கோபு ஆலய 175ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.18

நல்லூர் புனித யாக்கோபு ஆலய 175ஆவது ஆண்டு நினைவு மலர் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை மாலை 4 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மலர்க்குழுவின் தலைவர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப பிரதம விருந்தினராக யாழ். குருமுதல்வர் அருட்பணி எஸ்.பி.நேசகுமாரும் சிறப்பு விருந்தினராகப் பதுளை புனித மாற்கு ஆலயத்தைச் சேர்ந்த அருட்பணி தோமஸ் ஜோர்ஜ் அடிகளாரும் கௌரவ விருந்தினர்களாக அகவொளி நிலைய இயக்குநர் எஸ்.ஜே.இராஜநாயகம், யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் என்.ஆர்.ஜீ.கூல் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இதில் ஆசியுரையினை அ.ஸ்ரீபனும், நயப்புரையினைப் பளைக் கோட்டக் கல்வி அதிகாரி சி.இராசலிங்கமும் மதிப்பீட்டுரையினை யாழ். மாவட்டத தலைமைச் செயலகப் புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் எம்.வித்தியானந்தநேசனும் ஏற்புரையினை மலரின் ஆசிரியர் வி.பி.தனேந்திராவும் நிகழ்த்துவார்கள். (8-13)

## தென்மராட்சிப் பகுதிக்கு அடையாள அட்டைகள்

தென்மராட்சி,பெப்.18

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் 160 பேரின் தேசிய அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

இந்த அடையாள அட்டைகள் அந்தந்தக் கிராம அலுவலர்களிடம் கடந்த 16ஆம் திகதி கையளிக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பித்தவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(8-117)

## சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன

தென்மராட்சி,பெப்.18

சுனாமி கடல் பேரலைகளினால் பாதிக்கப்பட்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள 46 குடும்பங்களுக்குக் கடந்த 16 திகதி சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

கனடாவிலுள்ள தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் இப்பொருள்கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலகத்தில் வைத்துப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், நிர்வாக அலுவலர் ச.வரசிங்கம், கனடாவிலிருந்து வந்த நிறுவனத் தலைவர் வீ.எஸ்.துரைராசா ஆகியோர் இப்பொருள்களை வழங்கினார்கள்.

கோயிற்குடியிருப்பு, நுணாவில் மத்தி, சந்திரபுரம், மிருசுவில் வடக்கு, கைதடி வடக்கு ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்குத் தலா ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை, இந்நிகழ்வில் பிரதேச செயலகத்தினால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சமையல் பாத்திரங்கள் கொள்வனவு செய்யவென தலா 2 ஆயிரத்து 500 ரூபா பணம் வழங்கப்பட்டது. (8-117)


**திருவாக்கூட்டு படலம் வினாவிடைகள் - பதிப்பு 2**

A/L தமிழ் மாணவர்கள்

அநேகரின் வேண்டுகோளுக்கு ஏற்ப வெளிவந்துள்ளது.

கிடைக்குமிடம்: BEACON - யாழ்., வெலிங்டன் சந்தி.

(42221)

Note: பாடசாலை மாணவர்களுக்கான விசேட விலையில் கிடைக்கும். (15.03.2005 வரை)



## விற்பனைக்கு

எம்மிடம் புதிய, பழைய சகல விதமான CDக்கள், கசட் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஜனனி வீடியோ சென்ரர்**
வட்டுக்கோட்டை வீதி,
சித்தன்கேணி.

(42229) (24-16)



## தேவை

ஆடைகள் வெட்டித் தைக்கத் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.

T.P.: 0777 286069

(42227) (24-16)


## பருத்தித்துறை வீதியில் குழிகள் துரிதகதியில் செப்பனிடப்படுகின்றன

யாழ். நகரிலிருந்து பருத்தித்துறை செல்லும் பிரதான வீதியைப் புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ். நகரில் இருந்து கோப்பாய்ச் சந்தி வரை செல்லும் பிரதான வீதியில் காணப்பட்ட பெரிய குழிகள் தற்பொழுது தார் ஊற்றி புனரமைக்கப்பட்டுள்ளன. இந்த வீதி முழுமையாகப் புனரமைக்கப்படாது வீதியில் காணப்படும் குழிகள் மற்றும் சிறுசிறு சேதங்கள் என்பன மட்டும் தார் கலக்கப்பட்ட கலவை மூலம் துரிதமாகச் செப்பனிடப்பட்டு வருகின்றன. (ஜ-17)

## விஞ்ஞானப் பேச்சுப் போட்டி

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் பாடசாலைகளுக்கிடையே வருடந்தோறும் நடத்திவரும் விஞ்ஞான நிகழ்வுகளில் இவ்வருடத்திற்கான விஞ்ஞானப் பேச்சுப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியாளர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அந்தந்தப் பாடசாலை அதிபர்களினூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்கள் தவறாது போட்டியில் கலந்துகொள்ளவேண்டும் என்றும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினர் கேட்டுள்ளனர். (10-203)


## விற்பனைக்கு

எம்மிடம் புதிய சோபா செற்றிகள், கட்டில்கள், அதற்குரிய மெத்தைகள் (டபிள், சிங்கிள்), T.V, T.V. ஸ்டான்ட், டெக், றேடியோ மற்றும் பேப்பர் அமர்த்தும் இயந்திரம், ஜெனரேட்டர்கள், நாய்க்கூடு என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
த.குமாரசாமி
352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(42195) (24-11-45)



## RAINBOW TRAVEL & TOURS

யாழ்.மண்ணில் துரித கதியில் பல சேவைகள்

- ஐந்து தினங்களில் (சுவிஸ், ஜேர்மன், கனடா, பிரான்ஸ்) போன்ற நாடுகளுக்குப் பொதிகள் சேவை.
- வெளிநாடு செல்வதற்கான Passport விஸா ஒழுங்கமைப்புக்கள்.
- மத்தியகிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பு ஆலோசனைகள்.
- சகலவிதமான குதூகல வைபவங்களுக்கும் மண்டபத்துடனான ஒழுங்கமைப்பு வசதிகள்.
- யாழ்.கொழும்பு பயணசேவை.
- சர்வதேச நாடுகளுக்கான விமானச்சீட்டுக்கள்.

இத்துடன் இன்னும் பல சேவைகள் யாழ்.மண்ணில்

உங்கள் தொடர்புகளுக்கு!

RAINBOW TRAVEL & TOURS
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(முதலாம் மாடி)
தொலைபேசி: 021 222 - 3918
0777 - 328219

(சி-41014) (21-11-45-24)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 19 |
| - | - |
| 01 | 01 |
| - | - |
| 1955 | 2005 |



### திருமதி பூமிபாலசுந்தரம் கோகிலராணி

உயிர் உள்ளவரை உறங்காதம்மா
உங்கள் உறவால் உருகும் உள்ளங்கள்
கடவுளைக் கையெடுப்போம் நித்தம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக!

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர்: இ.சந்திரன்,
பிள்ளைகள்: சுதேஸ்குமார் (கனடா), மதனகுமார், சசிகுமார், ஜீவராஜ், தர்மஜோதி, பாலசோதுபன்.

நீதிராசா வீதி
(ஐயனார் கோயிலடி),
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (42223) (24-16)

## மரண அறிவித்தல்

அருட்சகோதரி

### அக்னெஸ் சந்தியாப்பிள்ளை (தி.கு.)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும் தற்பொழுது இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் வசித்து வந்தவருமான அருட்சகோதரி அக்னெஸ் சந்தியாப்பிள்ளை நேற்று 17.02.2005 வியாழக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரது பூதவுடல் இன்று (18.02.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(42230) (24-16)

தகவல்!
அருட்சகோதரி அன்சிலா ஜேம்ஸ்
மாகாணத் தலைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியில் பேரழிவைச் சந்தித்த கல்முனைப் பகுதி மீனவர்கள்

☆ 7ஆயிரத்து 501 குடும்பங்கள் இடம் பெயர்வு

☆ ஆயிரத்து 773 கடற்கலங்கள் சேதம்

☆ அகதிமுகாம்களில் நாலாயிரத்து 150 மீனவர் குடும்பங்கள்

☆ 75 மீனவர் கிராமங்கள் நிர்மூலம்

"க்கோல்" நிறுவனம் 5 கோடி ரூபா உதவி

☆ உதவிப் பணிப்பாளர் ஜோர்ஜ் அர்ப்பணிப்பு

இலங்கையில் கல்முனைக் கரையோரப் பிராந்தியம் விவசாயம் மற்றும் கடற்றொழிலுக்கு பிரபல்யமான பகுதியாகும். கல்முனைக் கடற்றொழில் பிராந்தியம் என்பது பெரிய நீலாவணை தொடக்கம் பாணமை வரையுள்ள 75 மீன்பிடிக் கிராமங்களை உள்ளடக்கியது. 16 ஆயிரத்து 150 மீனவர் குடும்பங்கள் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் வாழ்ந்து வந்தன.

ஆழகடல் மீன்பிடியில் கல்முனைப்பிராந்திய மீனவர்கள் கொடிகட்டிப் பறந்தவர்கள். ஆழ் கடல் மீன்பிடியாளர்கள் சங்கமும் ஒன்றுண்டு.

அம்பாறை மாவட்ட கரையோரப்பிரதேசம் வளங்கொழிப்பதற்கு இக்கடற்றொழிலும் ஒரு காரணம். அதற்கு இயற்கை அன்னையாம் கடல் பிரதான காரணம். அந்தக் கடல் சீற்றம் மெடுத்த காரணத்தினால் இன்று கல்முனைப்

## தொழிலை மீள ஆரம்பிக்க விரும்புவோருக்கு பொருத்தமான உதவிகள் விரைவில் தேவை

பிராந்தியத்தில் கடற்றொழில் ஸ்தம்பிதமடைந்துள்ளது. கடந்த ஒருமாத காலமாக மக்கள் கடல்மீன்களை உண்ணாமலே இருந்தனர்.

ஆழிப்பேரலை தாக்கி 50 நாள்கள் கடந்து விட்ட நிலையில் இன்னும் கல்முனையில் கடற்றொழில் முற்றாக ஆரம்பிக்கப்படவில்லை. தொழிலை மீள ஆரம்பிக்க மீனவர் விரும்பினாலும் அதற்கான கடற்கலங்கள் இல்லையென்பது பிரதான காரணமாகும்.

இன்று கரையோரப் பிரதேச பெரும்பாலான அகதிமுகாம்களில் இருப்போர் மீனவர்களே என்ற உண்மை வெளியுலகிற்குத் தெரிந்திருக்க வேண்டும்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களின் எதிர்காலம் கடற்றொழிலை மீள ஆரம்பிப்பது போன்ற பலவிடயங்கள் தொடர்பாக கல்முனைப் பிராந்திய கடற்றொழில் நீரியல்வள உதவிப் பணிப்பாளர் டொமிங்கோ ஜோர்ஜை செவ்வி கண்டேன்.

"க்கோல்" (Goal) என்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதி நிக்கூட்பாருடன் சுமார் 6 கோடி ரூபா திட்டத்திற்கு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு உதவிப் பணிப்பாளர் ஜோர்ஜ்ஜை மிகவும் வேலைப்பழுவுக்கு மத்தியில் பரபரப்பான சூழலில் இந்தச் சந்திப்பு நடந்தது.

★ *கேள்வி:* சுனாமியால் உங்கள் பிராந்தியத்தில் ஏற்பட்ட கடற்றொழில் இழப்பு பற்றிக் கூறுங்கள்?

● *பதில்:* மொத்தமாக 332 கோடி ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது. கணக்கெடுப்பு தற்போதும் எடுக்கப்பட்டு வருகிறது. மீனவர் படகு, தோணி, வலை மற்றும் உபகரணங்களில் சேதம் 130 கோடியே. மீனவர் நலன்புரி நிலையங்கள் மீனவர் காரியாலயங்கள் தங்குமிடவசதிகள் என்பனவற்றுக்கு 15 கோடி ரூபா சேதம்.

இதைவிட வீடுகளுக்கான சேதம் அதிகம்.

★ *கேள்வி:* எத்தனை மீனவர்களின் வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன?

● *பதில்:* மூவாயிரத்து 250 வீடுகள் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 735 வீடுகள் பகுதியாக சேதமாக்கப்பட்டுள்ளன. அவற்றை மீள அமைக்க ஆயிரத்து 615 மில்லியன் ரூபாவும் திருத்த 247 மில்லியன் ரூபாவும் தேவைப்படுகிறது.

★ *கேள்வி:* சுனாமியில் பலியான மீனவர் எத்தனை பேர்?

● *பதில்:* இலங்கையில் அதிகூடிய 1035 மீன வர் இறந்தது எமது பிராந்தியத்திலேதான்.

★ *கேள்வி:* அவர்களின் இழப்பு இன்றைய நிலை பற்றிக் கூறுங்கள்?

● *பதில்:* ஏழாயிரத்து 501 குடும்பங்கள் இடம பெயர்ந்துள்ளன. அதாவது 35 ஆயிரத்து 235 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் 4 ஆயிரத்து 150 குடும்பங்கள் அகதி முகாம்களிலும் மூவாயிரத்து 359 குடும்பங்கள் நண்பர், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

★ *கேள்வி:* மீனவர் படகுகளுக்கான சேதம பற்றி...

● *பதில்:* ஆயிரத்து 773 படகுகள் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன. நாலாயிரத்து 416 படகுகள் பகுதியாக சேதமடைந்துள்ளன.

★ *கேள்வி:* அவற்றை மீளப் பெற நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?


● *பதில்:* ஆம் முதற்கட்டமாக எமது கடற்றொழில் திணைக்களம் சீநோர் நிறுவன உதவியுடன் சேதமான படகுகளை 5 இடங்களில் நிலையங்களை நிறுத்தி திருத்தி வருகிறது. கல்முனை, நிந்தவூர், சாய்ந்தமருது, மாளிகைக்காடு, உல்லை போன்ற பகுதிகளில் படகுகள் திருத்தப்பட்டுவருகின்றன.

★ *கேள்வி:* சேதவிவரங்கள் பெறப்பட்டனவா? நஷ்டஈடு வழங்கப்பட நடவடிக்கை எடுத்தீர்களா?

● *பதில்:* சேத விவரங்களோடு அனைத்து தகவல்களையும் பெற எமது பிராந்தியத்தில் 12 கடற்றொழில் விபத்து முகாமைத்துவ நிலையங்களை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நிறுவி அதனூடாக தகவல்களைப் பெற்றுவருகிறோம். கடற்றொழில் அமைச்சர் சந்திரசேன விஜேசிங்க பணிப்பாளர் நாயகம் பியசேன ஆகியோர் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

★ *கேள்வி:* 50 நாள்கள் கடந்துவிட்ட நிலையில் இன்னும் மீனவர்கள் முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றனர். அவர்கள் தமது தொழிலை மீள ஆரம்பிப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?

● *பதில்:* ஆம் பல நடவடிக்கைகளை எடுத்



துள்ளோம். இன்னும் ஒருவார காலத்தில் 100 படகுகள் திருத்தப்பட்டு கடலுக்குள் இறக்கப்படும். மூன்றரைத் தொன் எடையுள்ள 50 பாரிய இயந்திரப் படகுகளுக்குரிய வலைகள் ஒவ்வொன்றும் 5 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தவை - வழங்கப்பட ஏற்பாடு செய்துள்ளது.

இவையாவும் 15 ஆம் 20ஆம் திகதிகளுக்கு இடையில் நடைபெறும். அப்போது கடற்றொழில் மீள ஆரம்பிக்கப்படும் என்று நம்புகிறேன்.

★ *கேள்வி:* கரைவலை பாவிக்க முடியாதறகு இடிபாடுகள் கடலுக்குள் கிடப்பது காரணமென கூறப்படுகிறது. அதனை அகற்ற என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

● *பதில்:* கட்டட இடிபாடுகளை அகற்ற 'க்கோல் நிறுவனம்' ஒப்பந்தமொன்று செய்துள்ளது. இரும்பிலான இயந்திர இழுவைப் படகு மூலம் அகழ்ந்தெடுக்கும் பாரிய இயந்திரத் துணையுடன் அவை அகற்றப்படும். அதன் பிறகு கரைவலை மீன்பிடி சுமுகமாகும்.

★ *கேள்வி:* 'க்கோல்' நிறுவனத்துடன் பாரிய ஒப்பந்தம் செய்துள்ளதாக அறிகிறேன். அதன் விவரம் என்ன?

**காரைதீவிலிருந்து**
**வி.ரி.சகாதேவராஜா**

● *பதில்:* ஆம் சாய்ந்தமருது படகுத்துறையை திருத்துதல் இயந்திரப்படகுகளை பழுதுபார்த்தல், நங்கூரமிடுதுறையை மீள அமைத்தல், 100 படகுகளைத் திருத்துதல், 50 வலைகள் வழங்கல். அகழும் இயந்திரத்தைப் பயன்படுத்துதல் போன்ற பாரிய வேலைத்திட்டங்களுக்காக சுமார் 6 கோடி ரூபா செலவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

★ *கேள்வி:* வெளிநாட்டுதவிகள் கோடி கோடியாக கொட்டப்படுவதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. உங்கள் கடற்றொழிலுக்கு ஏதாவது உதவி கிடைத்ததா?

● *பதில்:* எமது அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க பணிப்பாளர்நாயகம் ஜி.பியசேன ஆகியோர் எமது பகுதிக்கு ஆரம்பத்திலே விஜயம்செய்து பார்வையிட்டு உடனடி நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அவர்களூடாக அந்த நிதி எமக்கு கிடைக்கலாமென்று கருதுகிறேன்.

★ *கேள்வி:* கடற்கரையை அண்டிய பிரதேசத்திலுள்ள மீனவர்களை அவர்களின் தொழிலுக்கு வசதியாக அருகில் (200 மீற்றருக்கு அப்பால்) குடியேற்றாமல் தூர இடங்களில் குடியேற்றும் உத்தேசம் உண்டா?

● *பதில்:* மீள் குடியேற்றம் என்பது எம்மைச் சார்ந்தல்ல இருப்பினும் கடலிலிருந்து 100 மீற்றருக்கு அப்பால் மீனவர்களுக்கு வீடமைப்புத்திட்டத்தில் முன்னுரிமை வழங்க வேண்டுமெனக் கோரியுள்ளோம். அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும் அதனைச் செய்வார் என்று கருதுகிறோம்.

★ *கேள்வி:* கடற்றொழிலை கல்முனையில் மீள உறுதியாக சுட்டியெழுப்ப முடியும் என்று நம்புகிறீர்களா?

● *பதில்:* நிச்சயமாக முடியும். சுனாமிக்குப் பின் இரவு பகலாக உழைத்து வருகிறோம். எதிர்வரும் 15 ஆம் திகதி இதற்கு ஓரளவு பதில் வருமென்று நம்புகிறேன் - என்றார்.

கல்முனை மாவட்ட கடற்றொழில் அலுவலகம் சுறுசுறுப்பாக இயங்கி வருவதால் விரைவில் கடற்றொழில் வழமைக்குத் திரும்புமென்று எதிர்பார்க்கலாம். ★

## மனம் வருந்தி மன்னிப்புப் பெறுங்கள்

**தவக்காலச் சிந்தனை**

தீயவரோ தாம் செய்த பாவங்களை விட்டு மனம் மாறி என் நியமங்கள் அனைத்தையும் கைக்கொண்டால் வாழ்வது உறுதி.

குற்றம் புரியாத மனிதர் எவருமே இவ்வுலகில் இல்லை. ஆனால், ஒரு பொழுதும் செய்த குற்றங்களை ஏற்றுக்கொள்வதில்லை. மாறாகச் செய்த குற்றங்களை நியாயப்படுத்த முனைகின்றோம். இதனால் மேலும் மேலும் பாவம் செய்கின்றோம் என்பதனை மறந்து விடுகின்றோம்.

பொல்லார் தம் வழிகளினின்று திருந்தி வாழ்வதே இறைவனின் விருப்பம். மாறாகப் பொல்லார் தம் வழிகளை விட்டு மனம் மாறாவிடில் அவர்கள் இழைத்த துரோகத்தின் பொருட்டும் செய்த பாவத்தின் பொருட்டும் சாவர்என இறைவன் எச்சரிக்கின்றார். எனவே, பொல்லார் தாம் செய்த பொல்லாப்பினின்று விலகி நீதியையும் நேர்மையையும் கடைப்பிடிப்பதால் தம் உயிரை அவர்கள் காத்துக்கொள்வர்.

எனவே, நாம் உண்மையைக் கண்டுணர்ந்து செய்த குற்றங்கள் அனைத்தினின்றும் விலகி வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம்.

**பத்தாம் நாள்**

லூ.மேசி
நாவாந்துறை.

# வள்ளம் ஓடிய வன்னி வீதிகளில் பஸ் ஓடுவது சாத்தியமா?

**செய்திக்கட்டுரை**

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், எமது பிரதேசங்கள் யாவும் ஓரளவு மாற்றம் கண்டிருக்கின்றன. குறிப்பாக நாளாந்தம் முகமாலை நோக்கியும், ஓமந்தை நோக்கியும் பயணம் செய்யும் பிரயாணிகள் ஏராளம் பேர்.

இவர்கள் பஸ் பிரயாணத்தின்போது படும் அல்லல்கள் சொல்லிடைங்காதவை. வெள்ளம் பாய்ந்தபோது வள்ளம் ஓடிய வீதிகளிலே தற்போது பஸ் ஓட முடியுமா?

ஸ்கந்தபுரம் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் கிடங்கு வீதிகளில் பயணிப்பதே தலைவிதியாகிவிட்டது. கிளிநொச்சி டிப்போ வீதியானது கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் வரை தார் வீதியாக இருக்கின்றது. அதிலிருந்து ஏனைய தூரம்வரை சகல இடங்களிலும் வீதிகளில் பாரிய குழிகள் மற்றும் சிறிய குண்டுகள் என்பன காட்சியளிக்கின்றன.

இதைவிட அக்கராயன் பகுதியிலுள்ள அரசினர் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டி கூட ஒன்றில் முறிகண்டியூடாகச் செல்லவேண்டும், அல்லது கோணாவில் ஊடாக டிப்போ வீதியால் செல்லவேண்டும்.

ஆனால், இவ்விரு வீதிகளும் குறிப்பிட்ட தூரம் குண்டு குழிகளைக் கடந்தே தார் வீதியை

**ஜேசுயுஜேனியன்**
**ஸ்கந்தபுரம் செய்தியாளர்**

அடைகின்றன. இதனால், நோயாளர்களைக் குறித்த நேரத்திற்குக் கொண்டு சேர்ப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

வன்னியைப் பொறுத்தவரையில் கோடை காலத்தில் எப்படியோதான் [illegible] வீதிகளைச் சீரா[illegible] ஓடுகின்ற வெள்ளத்தால் எல்லாம் அரிக்கப்பட்டு குண்டும் குழியுமாகிவிடுவது வழமையாகிவிட்டது.

வீதிகள் ஓரளவு சீராக்கப்பட்டு விட்டால் பேருந்துகள், மற்றும் கனரக வாகனங்கள் புழுதியைக் கிளப்பிக்கொண்டு அதிவேகமாகப் பயணிக்கின்றன. இதனால் ஏனைய பயணிகள், மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டிகள், பாதசாரிகள் பெரும் அல்லற்படுகின்றனர்.

பிரதான வீதிகளில் உள்ள பாலங்கள் யாவும் புனரமைக்கப்பட்ட போதிலும், வீதிகள் சீராக்கப்படாமையால் பாலங்களின் ஊடாக மக்கள் பயணம் செய்வது சாத்தியமற்றதாகின்றது.

மரப்பாலத்தை அண்மித்த வீதியை மூடி வெள்ளம் பாய்ந்ததால் வீதிகள் அரிக்கப்பட்டுப் பாரிய குழிகளாகக் காட்சியளிக்கின்றன.

எனவே, மக்களின் அன்றாடப் போக்கு வரத்திற்குப் பெரிதும் உதவும் வீதிகளைப் [illegible] செய்ய உரிய திணைக்களங்களும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வாரி தேவாலயம்

21ஆவது ஆண்டு நிறைவின் நன்றித் துதி ஆராதனை

காலம்: 19-02-2005
நேரம்: பி.ப. 3.30 மணி
இடம்: கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்
89, பிறவுண் வீதி, கொக்குவில்.
விசேஷ செய்தியாளர்: **போதகர் பில் றைஸ்** (இங்கிலாந்து)

*உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

18-02-2005 விசுவாசிகளுக்கான கருத்தரங்கு
காலை 9.00 - 2.00 மணி

(42190)(26-11-16) **- கல்வாரிக் குடும்பம்.**



# கண்ணீர் அஞ்சலி



யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின்
முன்னாள் அதிபர்

## தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை

(T.V. பிரசித்த நொத்தாரிஸ்)

அவர்கள் 15-02-2005 அன்று காலமானார். அவரின் மறைவு எமது பாடசாலைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் மறைவினால் துயர்க்கடலில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்தி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திககின்றோம்.

யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை,
நீர்வேலி.
(42194)(26-11-16)

**செ.செல்வநாயகம் (அதிபர்),**
**ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**



உ
அம்பிகைதுணை



# ஏழாலை களபாவோடை
## வசந்தபுரம் அருள்மிகு
## ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
அம்மன் தாயார் அவர்களின்
# ஜெயந்தி தினவிழா

அம்மன் தாயார் அவர்களின் 16-01-2005 இல் நடைபெறவேண்டிய ஜெயந்தி தினவிழா தவிர்க்கமுடியாத காரணத்தினால் 20.02.2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது.

அபிஷேகம் காலை 7.00 மணி
பூஜை காலை 9.00 மணி

*சிவானந்தவாரிதி சிவத்திரு.* வ.குமாரசாமி ஐயா அவர்களின் தலைமையின் கீழ் பின்வரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

காலை 10.00 மணி: இணுவில் காயத்திரிபீட குருமுதல்வர் *சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்* அவர்களும் ஏனைய பல தேவஸ்தானக் குருமார்களும் அன்னையை ஆசீர்வதித்து வேதபாராயணம் செய்வார்கள்.

10.30 மணி பாதபூசை
11.00 மணி அருளாசியுரை
நல்லை குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளுரை:
சிவஸ்ரீ. தியாக கெங்காதரக் குருக்கள்
(ஈவினை விநாயகர் தேவஸ்தானம்) அவர்கள்

ஆசியுரை: திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள்
திரு.திருமதி சண்முகதாஸ் மனோன்மணி அவர்கள்
வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை அவர்கள்

*தொடர்ந்து ஊனமுற்றவர்கள், வயோதிபர்கள், விதவைகள் ஆகியோருக்கு அறக்கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.*

*இதனைத் தொடர்ந்து அன்னையின் வீதியுலாவும் மாகேஸ்வரபூஜையும் நடைபெறும்.*

அடியார்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து
அன்னையின் திருவருள் பெற்று இன்புறுவார்களாக.

"வசந்தபுரம்",
களபாவோடை,
ஏழாலை.

**- அடியார்கள்.**
(42206)(26-11-16)



இப்பொழுது உள்நாட்டு வெளிநாட்டிற்கான
சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலான
பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும்
எந்த நேரமும் துரிதமாக அனுப்பிட நீங்கள்
நாடவேண்டிய ஒரே வழி

**FedEx Express®**

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

தொடர்புகளுக்கும், மேலதிக விபரங்களுக்கும் நாடுங்கள்

**திருமுருகன் கொம் நெற்**

46, அடியபாதம் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

எமது நிறுவனத்துக்கு வேறு கிளைகள் இல்லை


## பல்கலை. விரிவுரைகள் 28 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கை வணிகபீட மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டின் விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று துணைவேந்தர் அறிவித்துள்ளார். (த-202)

## கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

குருநகர்,பெப்.18

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் சொ.சூ.சிறில் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுச் சபைக் கூட்டம் இம்மாதம் 12ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தும் அன்றையதினம் இடம்பெற்ற ஹர்த்தால் காரணமாகப் பிற்போடப்பட்டது. (8-51)

## வைத்திய நிலையங்களைப் புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல்

குருநகர்,பெப்.18

இயற்கை அனர்த்தத்தின்போது சேதமடைந்துள்ள வைத்திய நிலையங்களைப் புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குத் திருகோணமலையில் அமைந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீ பால டி சில்வா மற்றும் சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமை புரியும் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள் மற்றும் பாதிப்படைந்த வைத்திய நிலையங்களுக்குப் பொறுப்பான மாவட்ட வைத்திய அதிகாரிகள் ஆகியோரை இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி எச். ஏ.கஹந்தலியனகே அறிவித்துள்ளார். (8-51)


# விற்பனைக்கு

சாவகச்சேரி நகருக்கு மிக அண்டிய பகுதியில் சகல வசதியுடன் உள்ள வீடும் 4 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: T.P. : 0777 069078**
(சி-41023)



# விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட நல்ல நிலையில உள்ள பல வகையான போட்டோ கொப்பி, பக்ஸ் மெசின்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
**T.P.No. 777 - 301798.**
(42203)



# விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 3 மாடிகளைக் கொண்ட கடைக் கட்டடமும் நாவலர் வீதி, ஐந்து சந்திக்கு அருகில் நாலு பரப்புக் கொண்ட பெரிய வீடும் விற்பனைக்குண்டு. நேரில் வரவும்.

**L.K.S. தங்கமாளிகை**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
T.P.No. 0776687824 பத்மநாதன்
(42166)



# தேவை

பொற்பதிச் சந்தியில் இயங்கும் வீடியோக் கடைக்கு, கணனி அறிவுடைய அல்லது பழகி வேலை செய்ய ஆர்வமுடைய பெண்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
**ஷம்பெக் டிஜிற்றல் வீடியோ விசன்,**
பொற்பதிச் சந்தி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். T.P.: 0777 570087. (42205)



# சி.வித்தியாதரனின்
## சதுரங்கத்தில் இறுதியாட்டம்
## நூல்வெளியீட்டு விழா

காலம்:20-02-2005 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3.30 மணி
இடம்: யாழ்.இந்துக்கல்லூரி,
குமாரசாமி மண்டபம்

அனைவரையும் கலந்து சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible],
நல்லூர். (42211).

**ஹரி கஸ்பரோவ்**
**சதுரங்க அக்கடமி.**



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
# பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பாவித்த பேருந்து, சிற்றூர்தி, கார் ஆகியவற்றின் ரயர்கள், பழைய புதினப் பத்திரிகைகள் என்பன ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

நாள்: 24-02-2005 வியாழக்கிழமை
நேரம்: முற்பகல் 10.30 மணி
இடம்: யாழ்.பல்கலைக்கழகப் பிரதான வளாகம்

ஏலவிற்பனைக்குரிய பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் 21ஆம், 22ஆம் திகதிகளில் அலுவலக நேரத்தில் சிரேஷ்ட உதவி நிதியாளர் வழங்கலுடன் தொடர்புகொண்டு பார்வையிடமுடியும்.

ஏலத்தில் வெற்றி பெறுபவர் அதற்கான முழுப்பணத்தையும் உடனடியாகச் செலுத்திப் பொருள்களை அன்றையதினமே எடுத்துச் செல்லல் வேண்டும்.

துணைவேந்தர்,
(சி-41027)(26-11-16) **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



# PATRICIAN INSTITUTES
## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

வாகன உரிமையாளர்கள் வாகன தகுதிச் சான்றிதழ் பெறுவது பற்றிய அறிவித்தல்

**(FITNESS CERTIFICATE)**

மேற்படி விடயம் தொடர்பாக எமது நிறுவனத்தினால் கிழமை நாள்களில் வாகன தகுதிச் சான்றிதழ் வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதனை அனைத்து வாகன உரிமையாளருக்கும் அறியத்தருகின்றோம்.

வாகனங்களைக் கொண்டு வருபவர்கள் சிரமத்தைத் தவிர்ப்பதற்கு யாழ்.மாவட்ட வாகனப் பரிசோதகரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமையச் சரிபார்த்து வாகனங்களைக்கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அவை பின்வருமாறு:*

**1. வாகனத்தின் பதிவுப் பத்திரம் (புத்தகம்)**
**2. வாகனத்தின் ரயர்கள், முன் கண்ணாடி.**
**3. மின் விளக்குகள்**
**4. மழை நீர் துடைப்பி (பைவர்)**
**5. ஒலி எழுப்பி (கோர்ன்) மற்றும் சமிக்ஞைகள் (சிக்னல்கள்)**
**6. பிறேக் உடன் ஏனைய பொறிமுறைகள் போன்றவற்றைச் சரி பார்த்து வாகனத்தைக் கொண்டு வரவும்.**

மேலதிக விவரங்களுக்கு:

**பதிவாளர்,**
**59, சென்.பற்றிக்ஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.இல: 2226148** (சி-41021)(42-11-16-26)



இலங்கை மின்சார சபை - யாழ் பிரதேச அலுவலகம்

# மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்குமென்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
| --- | --- |
| 2005.02.19 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |
| 2005.02.26 | உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபைப் பகுதி. |
| 2005.03.05 | இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுககோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர். |
| 2005.03.12 | புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம். |
| 2005.03.19 | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெலலிப்பழை, பன்னாலை. |
| 2005.03.26 | குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

**பிரதேச மின்பொறியியலாளர்,**
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.


*"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும"*
*இலங்கை மின்சார சபை.*

(C/41017)(42-11-16-26) எனது இல: வமா/யா/வ/வீளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி, அறிவு, ஒழுக்கம் ஆகிய மூன்றும் ஒன்றுகூட்டிய சுடரொளி

# குமாரசாமிப்புலவர்



சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் அவர்கள் என்னுடைய ஆசிரியர். அவர் கல்வி, அறிவு, ஒழுக்கம் மூன்றும் ஒருங்குகூடிய மகா வித்துவசிரோமணி. அந்த மகான் எனக்கு ஆசிரியனாகக் கிடைத்தமை, என் தந்தையார் செய்துவைத்த தவத்தின் பேறு என்பதே என் திடமான கருத்து. 1917ஆம் ஆண்டு, கார்த்திகை மாதம் தொடக்கம் புலவர் பெருமானின் இறுதி மூச்சுவரை இம்மகானை, நான் பிரிந்ததில்லை.

அவரது ஆவி உடலை விட்டுப் பிரியும் போது அவர் அருகிலேயே இருந்தேன். அது நடந்தது ஓர் இரவு. மறு நாள் ஈமைக்கிரியை நடந்தது. அதன்மேல் அழுதுகொண்டு என் இருப்பிடம் சென்றேன். அந்தத் தினத்தை என்றுமே நான் மறந்ததில்லை.

புலவர் அவர்கள் பிறந்தது, 1854ஆம் ஆண்டு பிரமாதீச வருஷம் தை மாதம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை.

மறைந்தது 1922ஆம் ஆண்டு மாசி மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை.

புலவர் பிறந்த 1854ஆம் ஆண்டுப்புலமை நிலைமையை ஆராய்ந்து, அறிவுக்கு விருந்து செய்வதாயிருக்கும். 'புலவர் பிறந்த காலத்துப் புலமை' என்பதை, முதலாம் அத்தியாயமாகக் கொண்டு, புதிய முறையில் புலவருக்கு ஒரு சரித்திரம் எழுதினாலோ என்று என்மனம் கற்பனை செய்துகொண்டிருக்கிறது.

குறித்த முதலாம் அத்தியாயத்தை, ஒருவாறு எழுதி முடித்துவிட்டேன். அவ்அத்தியாயத்தின் குறிப்புரையாக 'புலவர் பிறந்தபோது' என்ற தலையங்கத்தில் இவ்வுரையை நடத்த எண்ணினேன்.

***ஈழம் தந்த முதுபெரும் தமிழ் வித்தகர்களில் சுன்னாகம், வித்துவசிரோமணி அ.குமாரசுவாமிப் புலவரும் ஒருவராவார். அவரது 150ஆவது பிறந்த தினம் இன்றாகும்.***

***கல்விப் புலமையிலும், அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்து மிளிர்ந்த இவரின் தலைசிறந்த மாணவர்களில் ஒருவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. எழுபதுகளில், அவர் இலங்கை வானொலியில் தமது குருநாதர் குறித்து தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.***

***அந்தத் தொடரின் முதலாவது பேச்சினை வித்துவசிரோமணி அ.குமாரசாமிப் புலவரின் நினைவாக இங்கு வெளியிடுகின்றோம்.***

புலவருக்கு ஊர் சுன்னாகம். புலவரின் பாட்டனார், தமிழ்தந்த சி.வை.தாமோதரம் பிள்ளையின் ஆசிரியர் ஆகிய முத்துக்குமார - கவிராஜர். அவர் பாடிய மிகப் பிரசித்தமன தொருபாட்டு "முடிவிலாதுறை சுன்னாகத்தான் வழி'' என்று தொடங்கும் பாட்டு. கவிராயர் சிறப்பித்த சுன்னாகத்தில் நின்று நாவலர் பிறந்த நல்ல ஊர் ஆகிய நல்லூரைச் சிறிது நோக்குவோம். புலவர் பிறந்த ஆண்டாகிய 1854 இல் நாவலருக்கு வயசு 32 தொடங்கி நடந்து கொண்டிருக்கிறது.

நாவலர் எழுதிய, 'சைவ தூஷண பரிகாரம்' என்ற பிரசித்தி பெற்றநூல் தூஷித்தவர்களும் மதித்த அந்த நூல் மேற்குறிப்பிட்ட ஆண்டிலே தான் வெளிவந்தது. மகாபாரத யுத்த முனையில் அபிமன்யு போல, ஆறுமுகநாவலர் விளங்கினார். இங்கிலாந்தில் வெளியிட்ட வெல்லியன் மெதடிக் அறிக்கை, இந்தச் சைவ தூஷண பரிகாரத்தை, 'முதல்தரமான மூளைதான் எழுதியிருக்க முடியும்' என்கின்றது.

நாவலர் 1847ஆம் ஆண்டு, டிசெம்பர் 31 ஆம் திகதி மாலை தொடக்கம் தம்மைச் சைவத்துக்கும், தமிழுக்கும் வெளிப்பட ஆர்பரித்துக் கொண்டு பள்ளிக்கூடம் கட்டுதல், பாலபாடம் எழுதப் படிப்பித்தல், பிரசங்கம் செய்தல் முதலிய பலமுகமான துறைகளில், ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட நாவலரை -

1870 இல் நமது புலவர் சந்தித்தார். அந்த நிகழ்ச்சியைப் புலவரோடொத்த வயதினரும், நாவலரின் தமையனார் புத்திரருமான த.கைலாசபிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்.

சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவரை, முதன்முதல் நான் கண்டது, நாவலரையாவின் மாளிகையிலாகும். இவர், 1870 ஆம் ஆண்டு முதல், நாவலரையா அவர்கள் இருக்குமளவும், அங்கே அடிக்கடிவந்து, இலக்கண, இலக்கிய தருக்கம் முதலியனவைகளிலே, தம்க்குள்ள சந்தேகங்களைக் கேட்டலையும், இவருடைய விவேகத்தைக் கண்டு, ஐயா அவர்கள் வியந்து தெரியாதவற்றை விளங்கப் படுத்திச் சொல்லிக்கொடுத்தலையும் கண்டதனால் இவரிடத்திலே, எனக்கொரு பிரீதியும், நட்பும் உண்டாயின.

அந்த நட்பு அக்கால முதல் குன்றாது வரவர வளர்ந்து கொண்டே வந்தது. அந்த நட்பினாலும் இவருடைய புலமைப் பெருமையினாலும் இவரை யாழ்ப்பாணம் சைவப்பிரசகாச வித்தியசாலையில், தலைமை ஆசிரியராயிருக்கும்படி வைத்துக்கொண்டேன். இக்கூற்று கனேசையா எழுதிய, குமாரசாமிப் புலவர் சரித்திர முகவுரையில் வருகின்றது.

1870தொடக்கம் எங்கே நாவலர் பிரசங்கஞ் செய்தாலும், அங்கே, நமது புலவரைக் காணலாம்.

தமக்கிணையில்லாத நாவலரால், கல்வி, கேள்விகளில், மேம்படும்பாக்கியம், புலவருக்குக் கிடைத்தது.

நாவலருக்கு வலக்கையாய் இருந்தவர் சங்கரபண்டிதர் சமஸ்கிருதத்தில் மகாமேதை.

புலவர் பிறந்த 1854இல் சங்கர பண்டிதருக்கு வயது 24. இவர் சுன்னாகத்தில் பிறந்து வளர்ந்தவர். புலவர் வீட்டுக்கு அயல் வீட்டினர். புலவரின் உறவினர். இங்ஙனமாயின் கல்வித் தொடர்பு பற்றிச் சொல்லவும் வேண்டுமா.

இனி, நாவலரிடமும், பண்டிதரிடமும் புலவரை ஆற்றுபடுத்தியவர்களை, ஏற்ற பக்குவஞ் செய்து வைத்த்வர்களைச் சிந்திப்போம்.

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவருக்குப், புலவர் பிறந்தபோது, வயது 25. இவர் கவிபாடும் புலமையில் முத்துக்குமாரகவிராயருக்கு அடுத்தபடியில் வைத்து எண்ணத்தக்கவர். நாவலரால் புலவர் என்று பாராட்டப்பட்டவர். அவரது மாணவர் முருகேச பண்டிதர்.

இவர் சங்கர பண்டிதருக்கும் மாணவர். இவரை இலக்கணக் கொட்டர் என்று சொல்லுவது வழக்கம். ஒரு முறை, பிரசித்தி பெற்ற தியாகராசச் செட்டியார், சென்னையில் திறமையான பண்டிதர் ஒருவரைத் தெரிவு செய்யும்படி, ஒரு பரீட்சை நடத்தினார், அதில் முருகேச பண்டிதரும் ஒரு பரீட்சார்த்தி.

முருகேச பண்டிதர் பரீட்சை வினாக்களுக்கு, விடையெழுதாமல், வினாக்களில் உள்ள இலக்கணப் பிழைகளை எழுதிக் கொடுத்துச் செட்டியாரின் பாராட்டையும், பண்டிதர் உத்தியோகத்தையும் ஒருங்கு பெற்றார். இந்த முருகேச பண்டிதருக்குப் புலவர் பிறந்தபோது வயது 24. முருகேச பண்டிதருக்கும் ஊர் சுன்னாகம். இவரே, புலவருக்கு இளமைத் தமிழ் ஆசிரியர்.

புலவரின், சமஸ்கிருத ஆரம்ப ஆசிரியர் , நாகநாத பண்டிதர். இவரைச் சங்கர பண்டிதருக்கும், ஆசிரியர் என்றும் கூறலாம். இவருக்கு ஆங்கிலம், தமிழ், சம்ஸ்கிருதம், சிங்களம், கன்னடம், தெலுங்கு என்னும் ஆறுபாஷைகளில் ஆற்றல் உண்டு. புலவர் பிறந்போது, நாகநாத பண்டிதருக்கு வயது 30. பண்டிதர், அரச உத்தியோகத்தர். அவருக்கும் ஊர்சுன்னாகம். புலவரின் உறவினர்.

புலவரின் தந்தை வழி, முத்துக்குமார கவிராயர்வழி, தாய் வழி நாகநாதர் பண்டிதர் வழி தொடக்க ஆசிரியர் இலக்கணக்கொட்டர் ஆக்ய முருகேச பண்டிதர். சங்கர பண்டிதர் அயலினர் உறவினர். புலவர் பின்பற்றும் அன்புக்குரு நாவலர் .

இந்நிலையில் புலவரின் தமிழ் விருத்தி சம்ஸ்கிருத விருத்தி எப்படியிருக்கும்?

காசிவாசி செந்திநாதையர், சமய அறிவில் மிக மேலானவர். அவருக்குச் சமய சாத்திர குரு, இணுவில் நடராசையர். நடர்ாசையர்,

## பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

நாவலரிடம் கிரமமாகச் சித்தியார் பாடங்கேட்டவர் நமது புலவர். நடராசையர் 1846இல் நாவலரிடம் படிக்கத் தொடங்கியவர். ஆகவே, 1954 இல் வளர்ந்தவராயிருப்பர்.

குமாரசாமிப்புலவர் சரித்திரத்தில் புலவர் பிறந்த காலத்துப்புலமை என்ற முதலத்தியாயத்தை வைத்துக்கொண்டு, எடுத்ததொரு சுருக்கம் இது. நாவலருக்குப்பிறகு தத்தம் துறைகளில் தமக்கிணையின்றிப் பிரகாசித்தவர்களில் மூவரை இங்கே குறிப்பிடலாம். அவர்கள் புலவர் பிறக்கும்போது கலை வளர் இளம்பிறைகள் அவர்களுள் ஒருவர் கலை நிறை மதியமாய்த் தமது கலாகிரணத்தைப் புலவர் பிறக்கும் போதே உமிழத் தொடங்கிவிட்டார். அந்தப் பூரண மதியம் நாவலர் மருகரும் மாணவருமான வித்வசிரோமணி பொன்னம்பலபிள்ளையேயாம். இலக்கிய இரசனையே, பிள்ளையின் வடிவம். 1854ஆம் ஆண்டில் பொன்னம்பலபிள்ளைக்கு வயது 18. மற்றொருவர் சபாபதி நாவலர் . அவ்வாண்டில் அவருக்கு வயது 9. மூன்றாவது பிறை காசிவாசி செந்திநாதையர் . அவருக்கு அப்போது வயது 6. இங்கே குறிப்பிட்ட மும்மணிகளின் ஒளியும் நமது புலவரின் புலமை விளக்குச் சுடரொளிகாணுதற்குப் பலவகையில் உபகாரமாக என்பது குறிப்பிடத்தக்கது.

(நன்றி: வானொலி மஞ்சரி, நவம்பர்,1970)

# "எங்கள் பலத்தில் தங்கிநிற்போம் நாங்கள்"

கடந்த கால கட்டங்களாக எமது நாட்டினுடைய போர் அனர்த்தங்களும், இடப்பெயர்வுகளும், அதன் மூலம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளும் எமது சமூகங்களைப் பெரிதும் பாதித்துள்ளன. இவ்வாறான பிரதிமைகளால் பெரிதும் பாதிப்புக்குள்ளானவர்கள் பெண்களே. இக்காலகட்டங்களில் எதிர் கொண்ட சவால்களாக,

- ★ கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்.
- ★ குடும்பத் தலைமைத்துவத்தை ஏற்றுள்ள முதிர்கன்னியர்கள்.
- ★ கணவனை இழந்த விதவைப் பெண்கள்.
- ★ குறைந்தளவு வருமானத்திற்காக கடின உழைப்பில் ஈடுபடும் பெண்கள்/சிறுவர்கள்.
- ★ வருமான நெருக்கீட்டினால் வறுமையில் வாழும் பெண்கள்.
- ★ உள நெருக்கீட்டிற்கு உள்ளான பெண்கள்.
- ★ ஊனமுற்ற பெண்கள்.

எனச் சமூகத்தில் பல பாத்திரங்கள், நடி பங்குகளை ஏற்று பல இன்னல்களுக்கு நாளாந்தம் முகங்கொடுக்கின்றாள்.

இதனால், எதிர்காலச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியாமல், திட்டமிட முடியாமல் பல அவலங்களைச் சந்திக்கின்றாள். இவற்றிற்கும் மேலாக எமது நாடு பொருளாதார வீழ்ச்சியினை கண்டுள்ளது. நாளாந்த விலை வாசிகளும், விலை ஏற்றங்களும் வரையறையற்றவையாகவும் காணப்படுகின்றன. இதன் மூலம் பிறரில் தங்கி வாழும் பெண், தலைமைத்துவம் ஏற்ற பெண், கணவனை இழந்த பெண் என்ற ரீதியில்,

- ★ அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்ய முடியாத நிலையில.
- ★ பிள்ளைகளது உடல், உள, கல்வித்தேவைகளை நிறைவேற்றமுடியாத நிலையில்.
- ★ சமூகத்தின் நச்சரிப்புக்களிற்கு உள்ளான நிலையில்.
- ★ வருமானத்தினை பெறமுடியாது பரிதவிக்கும் பெண்கள்.
- ★ அடக்குமுறை நெருக்கீட்டிற்கு உள்ளாகும் பெண்கள்.

இவ்வாறான பாதக விளைவுகளினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையைக் குறுக்கிடுகின்ற போது அவர்கள் எதிலும், நம்பிக்கையீனம், பயம், தாழ்வு மனப்பான்மை, விரக்தி போன்றவற்றிற்கு அடிமையாகின்றாள்.

எனவேதான் எமது நிறுவனம் கடந்த 25 வருடங்களாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றிவந்த செயற்பாடுகளில் இருந்து பெற்ற அனுபவம் வாயிலாக, பெண்களுக்கான திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தி பெண்களுக்கான திட்டங்களை வலுவூட்டியுள்ளது.

தமது சொந்த உழைப்பில் தாமே வருமானத்தினை ஈட்டுவதற்கு சுயதொழில் ஒன்றினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் விளைவாக வருமான அதிகரிப்பையும், அவர்கள் மனதில் நம்பிக்கையினை நாம் வலுவூட்டவும், மேம்படுத்தவும் "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" எனும் நாடக நிகழ்வு மூலம் நிதியினைத் திரட்டி பாதிக்கப்பட்ட 20 கிராமங்களினதும் மாதர் சங்கங்களினூடாக நிதியினை வழங்கி அவர்களது எதிர்காலத் திட்டத்தினை வளம்படுத்திக் கொள்ளும் முயற்சியினை மேற்கொண்டுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமானது மேற்படி நிகழ்விற்காக மக்களிடமிருந்தும், தனியார் நிறுவனங்களிலிருந்தும் மற்றும் ஏனைய நன்கொடையாளர்களிடமிருந்தும் கலை நிகழ்ச்சிகள் நடத்திப் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிதியினைத் திரட்டி வருகின்றது. எனவே, இத்திட்டத்திற்கு தங்களின் மேலான ஒத்துழைப்பினை வேண்டிநிற்கின்றோம்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர், பெண்கள் அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாட்டில் மாதர் சங்கங்களிற்கூடாக பெண்களின் சுயதொழில் முயற்சிக்கு உதவுவதற்காக நிதிசேகரிக்கும் பொருட்டு "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" எனும் நாடகத்தினை 23.02.2005 யாழ். பல்கலைக்கழகத்தில் மீண்டும் மேடையேற்றுகின்றனர். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமானது கடந்த 3 வருடங்களாகப் பெண்களின் முன்னேற்றத்தினை முனவைத்து அது தொடர்பான சிந்தனைகளை சிந்திக்கத் தொடங்கியதன் விளைவாக பெண்கள் பற்றிய கருத்து நிலையைப் பிரதிமைகளை மேம்படுத்த வேண்டிய தேவை எழுந்தது. ஒடுக்கு முறை சமூகத்தில் பெண் வாழ்வதன் காரணமாக அக, புற ஒடுக்கு முறைகளுக்கு ஆளாகி அதிலிருந்து விடுபடத் தெரியாத நிலையில் கூண்டில் அடைபட்ட கிளியாய் பெண்ணானவள் தனிமைபடுத்தப்படுகின்றாள்.

## அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்

சமூகத்தில் பெண்ணின் அந்தஸ்து நிலை, அதன் மூலம் அவள் முகங்கொடுக்கும் நெருக்கடிகளான, தனிமை, பாதுகாப்பின்மை, பயம், தன்னம்பிக்கையின்மை, வெறுமை உணர்வு, தன்னைப்பற்றித் தானே குறைவாக எடை போடல் சமூகத்திலிருந்து ஒதுங்கிக்கொள்ளல் போன்ற பிரச்சினைகள் தனக்கு மட்டுமே ஏற்படுகின்றன என பெண் நினைக்கிறாள். இதன் விளைவாக தன்னைத் தானே முகாமை செய்து கொள்ளாதவளாக, தலைமைத்துவம் ஏற்றுக் கொள்ளாதவளாக சமூகம் அவளை வர்ணிக்கின்றது. இதனால் சமூகத்தில் பல நெருக்கடிகளோடு அவலம் நிரம்பிய வாழ்வோடு அவள் சமூகத்தில் அங்கத்துவம் பெற்று வாழ்கின்றாள்.

வாழ்க்கை என்பது அர்த்தமற்ற ஒன்றாக உணரப்படுவதால் தன்னைப்பற்றிப் பிறரது எண்ணப்பாங்கு, தப்பான அபிப்பிராயங்கள், தவறான வார்த்தை வடிவங்கள் என்பன மூலம் பெண்ணின் வாழ்க்கைப் பயணத்தில் பல தடங்கல்கள் ஏற்படுகின்றன. இந்நெருக்கீட்டு தடங்கலானது சமூகம், குடும்பம், பண்பாடு, கலாசாரம், சமயம், கல்வி, சடங்காசாரம் சமூகத்துடன் பிண்ணிப்பிணைந்துள்ள அனைத்து நடவடிக்கைகளிலும், வாழ்க்கைக் கோலங்களிலும் பெண்ணின் பிரதிமையானது சமூகத்தில் மௌனச் சிலையாக வடித்தெடுக்கப்படுகின்றது.

கடந்தகாலப் போர்சூழலில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும், போர் அனர்த்தங்களும் அனேகமான பெண் தலைமைத்துவக் குடும்பங்களை உருவாக்கியுள்ளமை கண்கூடே. சமூகத்தில் பெண் தனக்கென வாழாது பிறருக்காக, பிறர் நலனுக்காக தன் உணர்வை கட்டிவைத்து மௌனச் சிலையாக வடித்தெடுக்கப்பட்ட படிமமாகவே வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

எமது கலாசார விழுமியங்களுடன் உருவாக்கப்பட்ட பெண நெருக்கீடுகளை எதிர்கொள்ள முடியாதவளாகின்றாள். ஆனால், இவற்றை முடிவுக்குக்கொண்டு வரும் நோக்குடன்தன் சொந்த முயற்சியில், தன்னைத் தானே நம்பி இருப்பவளாய், யாருக்கும் அடிபணியாதவளாய் சமூகத்தில் தன் உரிமையை, தேவையை தட்டிக் கேட்பவளாய் குறிப்பாக பெண்ணானவள் யாருக்கும் மண்டியிட்டு குன்றிப் போகாதவளாய், தன் சொந்தக்காலில் தான் நின்று நிலைக்கவேண்டும். அதாவது **"எங்கள் பலத்தில் தங்கி நிற்போம் நாங்கள்"** என்ற மகுட வாசகத்திற்கேற்ப பெண்ணின்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree**

2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)

G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com.

ஆரம்பம்: 20.02.2005 10.00 a.m.

**CIMA**

Managerial Level

ஆரம்பம்: 20.02.2005 11.30 a.m.

**aat (SriLanka)**

Stage II & StageIII

Medium: Tamil & English

ஆரம்பம்: 19.02.2005 11.30 a.m.

Further Details
Director
*JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.*
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.

(C/41016)(42-14)


# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.18

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் கு.சண்முகநாதன் சிறப்பு சொற்பொழிவாற்றுவார். (10-13)

# நீச்சல் போட்டியில் வெற்றியீட்டியோர்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.மத்திய கல்லூரி கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு இல்லங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட நீச்சல் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

முதலாவது இடம்: எஸ்.நிமலகாந்த்
இரண்டாவது இடம்: ரீ.சுரேன்
மூன்றாவது இடம்: என்.றதீஸ்தரன்.

(த-190)

# தையல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.18

கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தையல் பொருள்கள் கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் பிரம்மா மாதர் சங்கத்தின் தையல் பயிற்சி நிலையத்தின் தையல் பொருள்கள் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (த-139)

# கணவனை இழந்த பெண்கள் விவரம் பதிய அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு,பெப்.18

வலிகாமம்தெற்கு பிரதேச செயலர் பிரிவில் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் கணவனை இழந்த பெண்கள் போன்றோரின் விவரங்கள் கிராம சேவை அலுவலர்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலைகளில் பாதிக்கப்பட்ட பெண்கள் தத்தம் பகுதி கிராம சேவையாளர்களிடம் சென்று தமது அடையாள அட்டை, பங்கீட்டு அட்டைகள், கணவனின் இறப்பு அத்தாட்சிப்பத்திரம், விவாகரத்துப்பத்திரம், திருமணப் பதிவுச்சான்றிதழ் போன்றவற்றை சமர்ப்பித்து பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-152)


யா/ ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
வருடாந்த இல்ல விளையாட்டு விழா 2005

இன்று (2005.02.18) வெள்ளிக்கிழமை
பி.ப. 1.45 மணி தொடக்கம் நடைபெறும்.

முதன்மை விருந்தினர்
திருமதி ச.கார்கேயன் அவர்கள் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்)

சிறப்பு விருந்தினர்
திரு.ச.சிவானந்தன் அவர்கள் (செயற்றிட்ட அதிகாரி, யாழ் கல்வி வலயம்)
திருமதி ப.அன்ரனி அவர்கள் (ஓய்வுபெற்ற உப அதிபர்)

விழாத் தலைவர்
திரு.எஸ்.சோமேஸ்வரபிள்ளை (அதிபர்)

விளையாட்டு விழாக் காண விருயமாய் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

(42171)(39) விளம்பர அனுசரணை - தி.சந்திரசேகரன்



Certifiedby.net இனால் உலகம் முழுவதும்
வெளிப்படுத்தப்பட்டுள்ள இலங்கையின்
ஒரேயொரு சான்றிதழ்

**SAAMSTECH** இன்
தேசிய ஆங்கில டிப்ளோமா

October 30 நடைபெற்ற பரீட்சை முடிவுகள்
www.certifiedby.net இல்
Exam Id:SLSA 0305 Center Id: CYSL 9801
Certificate ID: ஒவ்வொரு சான்றிதழிலும்

சான்றிதழ்கள் வரும் 23.02.2005 வழங்கப்படும்

பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், ஒப்படைகள் வழங்கியோர், ஒலிப்பயிற்சியில் கலந்துகொண்டோர் வரும் 19ஆம் திகதிக்கு முன் பெயர்களைப் பதிவுசெய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வரும் May 28,29 இல் நடைபெறவுள்ள ஆசிரியர்களுக்கான, அலுவலர்களுக்கான மற்றும் பொதுத் தொடர்பாடலுக்கான தேசிய ஆங்கில மற்றும் தேசிய கணனி டிப்ளோமாவிற்கான விண்ணப்பங்களை வரும் 19ஆம் திகதிக்கு முன் நேரடியாக அல்லது தபால்மூலமாக அனுப்பலாம்.

**SAAMSTECH**
841, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
Ph. 4591571.

(42185)(42-14)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 – 09 – 1948



மறைவு 26 – 02 – 2003

## கந்தையா ஜெயராசா

*(கமநல சேவை ஊழியர் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு)*

திதி: 19 – 02 – 2005

எங்கள் அன்புத் தெய்வமே – நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் இரண்டு
சென்றாலும்
நீங்கள் எம் துயர்துடைக்க – இனி
நீங்காத பிறவி நன்று எடுத்தால்
மிகையாகாது தெய்வமே!

கச்சார் வெளி,
பளை.

(சி.41004)(39)

தகவல்:
குடும்பத்தினர்.


We Serve
சுன்னாகம் லயன்ஸ் கழகம்

15 ஆவது ஸ்தாபக விழாவும்

சமூகசேவையாளர் செஞ்சொற் செல்வர்

ஆறு. திருமுருகனுக்கு

பாராட்டு விழாவும்

இடம்:
இராமநாதன் மண்டபம் -
இராமநாதன் பெண்கள் கல்லூரி, மருதனார்மடம்
காலம்:
20.02.2005 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:
காலை 9.00 மணி
தலைவர்:
லயன் த.அரியரத்தினம்
பிரதமவிருந்தினர்:
லயன் சரத்குணசேகரா- MJF, J.P.
Lady Lion - ANNE, MJF
கௌரவ விருந்தினர்கள்:
லயன் கே.கணேஸ்
(அரச அதிபர் - யாழ்ப்பாணம்)
லயன் எஸ்.சிவபாதசுந்தரம் MJF, J.P.
(முன்னை நாள் மாவட்ட ஆளுநர்
சிறப்பு விருந்தினர்கள்:
லயன் சரோஜினி இளங்கோவன் (மாவட்ட நீதிபதி)
லயன் S.P.சிவஞானம் (ஸ்தாபக தலைவர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(42181) (24)

அனுசரணை:
அன்னா தொழிலகம்
தரை வீதி, இணுவில்.
தொ.பே.: 222 3565


## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 21.01.2005 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

தோற்றம் 06 08 1930



மறைவு 21 01 2005

அமரர்

## சுப்பையா யோகலிங்கம்

அவர்களின்

அந்தியேட்டிக்கிரியையும் வீட்டுக்கிருத்தியமும் நாளை (19.02.2005) சனிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் துயரில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலமாகவும், தந்தி மூலமாகவும், வேறு வழிகளிலும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் சகல விதத்திலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கரணவாய் தெற்கு,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

(42038)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Issue (இசூஸ்) ELF 350 அலுமினியம் Body கன்டர் (காட்சி அறை நிலையில் Show room condision) விற்பனைக்குண்டு. தொடர்பு: 99/7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 2506 (42186)

பாவனையிலுள்ள மோட்டோறோலா தொலைபேசி இணைப்பு (Land Phone) விற்பனைக்கு உண்டு. தொடர்பு, T.P. 0777 261014. (42189)

பாவித்த நல்ல நிலையிலுள்ள இரும்பக கதிரைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.109, கண்டிவீதி, கிளிநொச்சி. T.P.: 021 228 5756. (34465)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு சந்திக்கு அருகில் GPS வீதியில் கலட்டியடியில் 4 பரப்புக் காணியும் 3ஆம் கட்டை வீதியில் 4½ பரப்புக் காணியும், செம்மணி வீதியில் அமைந்துள்ள தாலங்காடு, தாளையடியில் 16 பரப்பு வயற்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: N.கிருஷாந், 38, இராச வீதி, சட்டநாதர் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 0777 499284 (சந்திக்கும் நேரம் மாலை 5 மணிக்குப் பின்பு).(சி-41015)

யாழ்ப்பாணம் பிரதான வீதி,-முதலாம் பிரிவு-புதிய நீதிமன்ற கட்டடத்துக்கு முன்பாக பிரதான வீதியிலிருந்து மூன்றாவது காணி 1¾ நிலப்பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல.92, கண்டிவீதி, கச்சேரி, யாழ்ப்பாணம். T.P.: 0776111419, 222 7096. (42173)

திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதியில், நிலப்பரப்பு 1 குழி 16 வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 222 3500 (42193)

## வீடு வாடகைக்குத் தேவை

மாநகரசபை எல்லைக்குள் அல்லது நல்லூர், கந்தர்மடம், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் ஆகிய பகுதிகளில் 4 பேர் கொண்ட குடும்பம் தங்குவதற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு: T.மயூரன், T.P. No: 222 2769, 4590001, 077-6661605. (42226)

## எங்கள் நாடு

புதன்கிழமை இரவு வானொலியில் 'எங்கள் நாடு' நாடகநூலின் சிறப்புக்கள் எல்லாவற்றையும் சொன்னார்கள் கேட்டீர்களா? கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் மாணவர்களுக்கான பதினொரு நவீன நாடகங்களைக் கொண்ட நூல் 'இமயம்'. (42224)

## தவறிவிட்டது

செல்வி பவதாரணி ஆதவன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 808140446V), Naita Training Record Book என்பன 764 பாதை மினி பஸ்ஸில் தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திரு.ஆதவன், இல.284, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்ற முகவரியில் நேரிலோ அன்றி தபால் மூலமாகவோ ஒப்படைத்துதவவும். (42191)

இராசையா யோராஜா ஆகிய எனது NOKIA கைத்தொலைபேசி 14-02-2005இல் தம்பசிட்டி றோட், பருத்தித்துறையில் தவறி விட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 021 226 3062 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (42196)

திருநாவுக்கரசு சத்தியா என்பவரது தேசிய அடையாள அட்டை (775663430V), ஆனைப்பந்திச் சந்திக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 138/7, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P. 222 2365. (42184)


தமிழ் - ஆங்கில Computer Typing

கட்டெழுத்து, சுருக்கெழுத்து, MS Office, Page Maker, Coreldraw, Photoshop, Graphic, Designing

STCA (Estd in 1977)

149 (37), சிவன்பண்ணை வீதி, கொட்டடி யாழ்ப்பாணம்.

(42222)(21-16) (வைத்தீஸ்வராக்கல்லூரிக்கு அருகில்)



விற்பனைக்கு

எம்மிடம் VISUALS CD க்கள் விற்பனைக்கு உண்டு. அத்துடன் ஓடியோ, வீடியோ CDக்களும் பெற்றுக்கொள்ளலாம்.

மைக்ரோ ரவர் மியூசிக் சென்ரர்

தெல்லியான் வீதி, வட்டுக்கோட்டை.

077 3053168

(42182) (21-16)


## பாவனைக்குதவாத பாண்கள் அழிக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.18

வெதுப்பகத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத பாண்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது கொழும்புத்துறைப் பகுதியிலுள்ள வெதுபகத்தில் பாவனைக்கு உதவாத பாண்கள் கைப்பற்றப்பட்டன.

80 இறாத்தல் வரையான அந்தப் பாவனைக்கு உதவாத பாண்கள் உடன அழிக்கப்பட்டன.

(10-202)

## விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.மாவட்டச் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் 2 ஆம் மாடியில் உள்ள மாவட்டக் கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(10-203)

## கிணறுகளைத் துப்புரவு செய்யும் பணி

அரியாலை,பெப்.18

வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவுப் பிரதேசங்களில் சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த கிணறுகளைத் துப்புரவு செய்யும் பணியில் தேசிய நீர் வழங்கல் அதிகார சபையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களால் வடமராட்சி கிழக்குப் பகுதியில் தற்போது 150இற்கும் மேற்பட்ட கிணறுகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், முல்லைத்தீவுப் பகுதியில சுனாமி அனர்த்தத்தினால் சேதமுற்ற கிணறுகளைச் சுத்தம் செய்யும் பணிகள தற்போது நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10-203-17)

## வைத்தியசாலைக்குத் தளபாடங்கள

தென்மராட்சி,பெப்.18

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மற்றும் குளிரூட்டிகள் என்பன சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க இவை வைத்தியசாலைப் பொறுப்புதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாலனிடம் கையளிக்கப்பட்டன.

(10-117)


மனதார வாழ்த்துகின்றோம்

யாழ்.மாவட்ட அரச அதிபராக 2005-01-01ஆம் திகதி பதவி ஏற்ற திரு.க.கணேஸ் அவர்களையும் யாழ்.மாவட்ட செயலகத் திட்டப் பணிப்பாளராக 2005-01-15 ஆம் திகதி பதவி ஏற்ற திரு.க.கேதீஸ்வரன் அவர்களையும் இவர்களின் சேவைகள் வளர வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

13,14 தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. (சி-41033)(21-16)



கொழும்பு இறையியல் கல்லூரி நடாத்தும்

தேவ ஊழியர்களுக்கான கற்கைநெறி

2005 மாசி 21 முதல் 25 வரை

விரிவுரையாளர்: வண.ஒரல் சிங்

பாடம்: கற்கும் முறைகள் Study Methods (இப்பாடநெறியில் ஆய்வுகள் செய்வது பற்றியும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவது பற்றியும் விளக்கம் அளிக்கப்படும்)

இடம்: தேவசபை இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: மு.ப.9.00 முதல் பி.ப 2.00 மணிவரை

குறிப்பு: சபைப் போதகரின் சிபாரிசுடன் புதியவர்களும் இணைந்து கொள்ளலாம்.

(42234)(21-16) - இணைப்பாளா


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமதி சோமசுந்தரம் நீலவேணியம்மா (இந்திராணி)

பிறப்பு 1925-10-19 இறப்பு 2005-01-20

நாளை (19-02-2005) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருறும்:

பிள்ளைகள் :- சோ. அருணா, சோ.வசந்தா, க.சுதா, ப.லதா, சோ.பத்மராணி

துன்னாலை, கரவெட்டி (42233) (21-16)

# மரண அறிவித்தல்



## கதிரவேலு முத்தையா

புங்குடுதீவு மேற்கு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கதிரவேலு முத்தையா அவர்கள் 14.02.2005 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் கதிராசிப்பிள்ளையின் அன்புக்கணவரும் சண்முகநாதன் (பிரான்ஸ்), ஜெயராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசலெட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற அமரர் முத்துக்குமாரு ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபோசினி, சோபனா, பிரவினா, இராஜேஸ்கண்ணா, சுரேஸ்கண்ணா (பிரான்ஸ்), சறோஜ் கண்ணா, உருத்திரகண்ணா, தாரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.02.2005) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு முனைப்புலம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

3ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (42235)(43-21-16)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம்



மருதங்கேணி, வத்தராஜனைப் பிறப்பிடமாகவும் பளை, தம்பகாமத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வள்ளியம்மை 16.02.2005 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் யோகநாயகி (தம்பகாமம்), ஏகாம்பரம் (சுவிஸ்), பொன்னுத்துரை (லண்டன்), காலஞ்சென்ற கணவதிப்பிள்ளை (தம்பகாமம்), நித்தியானந்தம் (வத்திராயன்), யோகராணி (தம்பகாமம்), யோகேஸ்வரி (கல்வியங்காடு), யோகலட்சுமி (உடுத்துறை), ஓப்பிலாமணி (நோர்வே), பேரின்பநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவக்கொழுந்து, ராசம்மா, மாலா, நாகம்மா, விமலாதேவி, முருகேசி, ஆண்டியய்யா, ராசேந்திரம், ஸ்ரீவள்ளிநாயகி, குலநதளகி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவஞானசுந்தரம், சிவபாதம், அன்னலட்சுமி, புஸ்பலட்சுமி, வசந்தன், சாந்திகா, சாந்தன், குமரன், குட்டி, தாசன், ரூபன், செல்வா, ஜெகன், சுதாகர், சுகு, ஜெயா, பவானி, றஜனி, கணேஸ், ஜீவா, குமுது, குவேந்திரன், பானு, பிறேம், குட்டி, லதா, விஜி, அருள்காயத்திரி, கருசன், நிருஷன், தனுராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2005) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தம்பகாமம், பளை என்னும் முகவரியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சு.நித்தியானந்தம் (மகன்).

தம்பகாமம், பளை. (சி-41047)(24-21-16)

## பண்டிதர் நாகமணி கந்தையா

(இளைப்பாறிய அதிபர்)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய பண்டிதர் நாகமணி கந்தையா அவர்கள் லண்டனில் 10.02.2005 அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - சின்னத்தங்கச்சி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் ஸ்ரீபத்மாவின் (சரசு) அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை, திருமதி சேதுப்பிள்ளை, நடராசா, காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, செல்வி, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரகுமாரி (லண்டன்), குமாரதாசன் (ஆஸ்திரேலியா), ஜெயதாசன் (நோர்வே), கண்ணதாசன் (கனடா), செந்தூரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மயூரவரதன் (லண்டன்), தர்ஷினி, மல்லிகா, சித்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும் மதனரூபன், கிரிசாந்தன், காயத்திரி, பவித்திரா, பிரசன்னா, ஸ்ரெபனி, டனி, அஞ்சலி, சிந்துஷா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் பாலசிங்கம், லோகேந்தி ராணி தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.02.2005 வியாழக்கிழமை லண்டனில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.பாலசிங்கம் யாழ்ப்பாணம் - சித்ராலயா.

351, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (42237)(24-21-16)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முறிகண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தனர்.

காயமடைந்த மூவரும் உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். வரும் வழியில் றஸீம் மரணமானார். ஏனைய இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கு-12)

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான வி.மணிலால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அவர், யாழ். உதைபந்தாட்ட லீக் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்தோரை யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்தார். நேற்றுமாலை 5மணியளவில் யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப் பிள்ளை தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் மாதுளன், திருகோணமலை மாவட்ட விளையாட்டுப் பொறுப்பாளர் தீபன், பரியோவான் கல்லூரி அதிபர், எஸ்.தனபாலன், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் வேதாபரணம் மற்றும் லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

யாழ். லீக்கிற்கு உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சார்பில் 50 பந்துகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மணிலால் பெர்னாண்டோ, யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கு இரண்டு வீரர்களை உள்வாங்கத் திட்டமிட்டிருப்பதாகவும் யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் இரண்டினைத் தெரிவுசெய்து அவர்களுக்கான முழு செலவினையும் தாம் பொறுப்பேற்று சகல விளையாட்டுப் பயிற்சிகளையும் வழங்கவிருக்கின்றார் எனவும் தெரிவித்தார். (க-190)

## ஐ.நா. செயலாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்து உரிய பதில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் கதிர்காமர் உறுதியளித்திருந்தார்.

அதற்கு அமையவே, வெளிவிவகார அமைச்சு தற்போது நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

வெளிவிவகார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய இலங்கை அரசின் ஆட்சேபனையை ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி பேர்னாட் குணதிலக ஐக்கியநாடு செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தினார் என அறியவந்தது. (து-க)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

1999ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அன்றைய திகதியில் இருந்து ஆறுவருட காலத்துக்கே தாம் விரும்பிய ஒருவரை நாட்டு மக்கள் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தனர்; ஏழு வருடங்களுக்கு அல்ல. இதனை அத்தேர்தலில் வாக்களித்த ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்வார்கள்.

ஆனால், அரசின் பேச்சாளரான அமைச்சர் மங்கள சமரவீர "2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்தான் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவோம்" - என்கிறார் இவருக்கு அரசமைப்பின் அரிச்சுவடி கூடத்தெரியாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 'ஹிந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று உறுதியாகக் கூறியிருக்கிறார். ஆனால், அண்மையில் அப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் தலைகீழான கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்திற்குச் சாவு மணி அடிக்கும் இச்செயலை நாம் அனுமதிக்கப்போவதில்லை. இந்த ஆண்டின் இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாவிட்டால் நாடு முழுவதும் மக்களைத் திரட்டிப் போராட்டம் நடத்துவோம் - என்றும் ஜி.எல்.பீரிஸ் கூறினார். (து-க)




நேற்று யாழ்.வருகைதந்த ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின்உப தலைவர் மணிலால் பெர்னாண்டோ யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் பிரதிநிதிகளை சென்.ஜோன்ஸ், கல்லூரியில் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். இடமிருந்து வலமாக லீக்கின் தலைவர் உரையாற்றுவதையும் மணிலால் பெர்னாண்டோ, யாழ்.மாவட்டவிளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன், திருமலை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர். தீபன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: பிரபா)

## நான்காவது நாளாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியவாறு பேரணியாகச் சென்றனர்.

யாழ். பிரதான வீதி மற்றும் கோயில் வீதியூடாக நகர்ந்துவந்த பேரணி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தைச் சென்றடைந்தது. அங்கு வைத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதியிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

பேரணியில் கலந்துகொண்ட ஒவ்வொரு அமைப்பின் சார்பிலும் ஒவ்வொரு பிரதிநிதி எனத் தனித்தனியே மகஜர்களைக் கையளித்தனர். (து-7-13)

## நாடுமுழுவதிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றைப் பிரகடனப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இது அமுலுக்கு வந்தால் முஸ்லிம் மக்களுக்குப் பாரிய பாதிப்பு ஏற்படுத்தும் என முஸ்லிம் அமைப்புகள் அரசுக்குச் சுட்டிக் காட்டியுள்ளன.

இது தொடர்பாக முஸ்லிம்களின் தார்மீக எதிர்ப்பை வெளிக்காட்ட அனைத்து முஸ்லிம்களையும் இன்று நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு முஸ்லிம் மக்கள் செயலணி என்ற அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. ஜும்ஆத் தொழுகைக்குப்பின் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும். (து-க)

## தூள்செய்யப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வந்த இந்தக் கஞ்சாத்தூளை போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலீஸார் நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

கஞ்சாவைத் தூள்செய்து அதைப் பல்வேறு போதைத்தேவைகளுக்கும்பயன்டுத்திவந்தமை விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

நீண்டகாலமாக மிகவும் இரகசியமான முறையில் கஞ்சா தூள் மூடைகளை நாடு முழுவதும் விநியோகித்துவந்தஇரண்டு நபர்களும் பொலீஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து)

# குறிகாட்டுவானிலிருந்து குமுதினி சனியன்று கச்சதீவு புறப்படும்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்துக்குச் செல்லும் யாத்திரிகர்களை அழைத்துச் செல்லும் பணியில் குமுதினிப் படகு ஈடுபடுத்தப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு குமுதினிப் படகு குறிகாட்டுவானில் இருந்து யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு கச்சதீவுக்கான தனது பயணத்தை ஆரம்பிக்கும் என நெடுந்தீவு உதவி அரச அதிபர் எம்.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

குறிகாட்டுவானில் இருந்து புறப்படும் குமுதினிப் படகு நெடுந்தீவு சென்று பின்னர் முற்பகல் 10 மணிக்கு கச்சதீவு நோக்கிப் புறப்படும் என்றும் உதவி அரச அதிபர் தெரிவித்தார். (எ-76)

## ஊடகத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல்துறைமுகங்கள் அதிகாரசபை அமைச்சு, கல்வித்துறைப் பிரதி அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு என மூன்று அமைச்சுப் பொறுப்புகள் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் வழங்கப்பட்டிருக்கின்றன.

அவற்றிலே ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்பு மங்களவிடமிருந்து [illegible]ப்பட்டு அனுர பிரியதர்சன யாப்பாவிடம் வழங்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. (எ-க)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகநாதன் லீலாவதி



செட்டித்தெரு, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன லீலாவதி அவர்கள் நேற்று (17.02.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வரதராஜவின் அன்புச் சகோதரியும் சண்முகநாதனின் அன்பு மனைவியும் சிவராஜா, யோகராஜா (ஆனந்தி - சிவானந்தா கபே, நல்லூர்), இந்திராணி, ரஞ்சினி, ஜெயதாஸ் (ஜெயா பாமசி, நல்லூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராசமணி, சிவனேஸ்வரி, காலஞ்சென்ற மனோகரன், சிறீக்காந்தன், கலைவாணி ஆகியோரின் மாமியாரும் சர்மிளா, சர்மினி, சஞ்சித், சஞ்சிவ், சுவேனிதா, கேமாரனிற்ற, மயூரன், செந்தூரன், அர்ச்சனா, தூஷாந், நிருயலா, சஜீவா, துஷாரா, நிலக்ஷன், தர்மினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2005) வெள்ளிக்கிழமை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/21, செட்டித்தெரு,*
*நல்லூர்.*

தகவல்: ஆனந்தி
(சிவானந்தா கபே - நல்லூர்).

### இராமச்சந்திரன் வரதராசன்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, பெருங்குளம் பிள்ளையார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் வரதராசன் அவர்கள் நேற்று (17.02.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மைத்துனர் கனகசபாபதி (பப்பு).

*பெருங்குளம் பிள்ளையார் கோயிலடி,*
*சாவகச்சேரி.*

(42251)


புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு விசேட விலைக்கழிவு

KODAK EXPRESS

4R(புகைப்படச்சுருள்களுக்கு) 10.00 9.00

12x[illegible] 500.00 400.00

KODAK EXPRESS இல் பிரதியாக்கம் செய்யும் அனைத்து SIZE களும் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



KONICA NICE PRINT

4R (புகைப்படச்சுருள்களுக்கு) 8.00

4R CUT NEGATIVE PRINT 10.00

ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப் & கொனிக்கா கலர் லாப்
14,ஸ்ரீ வேங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலடி.
யாழ்ப்பாணம்.
T.P:-021222 3493

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off stanly Rd)
Tel:0777222422

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING

QUICK BOOKS PRO + ACCPAC + MYOB
ஆரம்பம்:-19-02-2005
Batch I :-9.30-10.30
Batch II :-3.00-4.00
காலம்:- 4மாதம்
(சி-40969)

IBMS
புதிய பிரிவுகள்
19.02.2005
21.02.2005
பகல் 10.00 மணி

Diploma Courses
Dip in Microsoft Office - 1800.00
Dip in Internet Technology - 3000.00
Dip in Desk Top Publishing - 2400.00
Dip in Hardware Engineering - 3750.00

தலைமை அலுவலகம் :
# 410, K.K.S. Road, Jaffna.
கிளை நிறுவனங்கள் :
• NMMV Road, Nelliady
• Sangaththanai, - Chavakachcheri
(சி-40990)

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்.நகர்.
A/L 2007
கணக்கீடு
By:K.S.மோதிலால் (B.B.A.)
ஆரம்பம்: 19.02.2005
Sat. 5.00 p.m.
(Sat.Sun.) 5.00 p.m.
★ தனிப்பட அனுமதி உண்டு
(42218)

குறுகிய காலத்தில் Chartered Engineer பட்டம் பெறுவதற்கு பக்கம் 02 ஐ பார்க்கவும். (சி-41042)

குணப்படுத்த முடியாத நோய்களா?

குணப்படுத்த முடியாத நோய்கள் என்று சொல்லப்படுகின்ற ஈரல் அழற்சி, மஹோதரம், இதயத்தில் துவாரம், இதயவால்வுப் பிரச்சினைகள், நிகொட்டின் விளைவுகள், அல்சிமர்ஸ் நோய்கள், மனச்சோர்வு, ஒற்றைத் தலைவலி, விரலில் கட்டி மற்றும் வீக்கம் போன்ற சகலவற்றுக்கும் எம்மிடம் பரிகாரம் உண்டு.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOLAPPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01.
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
(சி-41043)

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
A/L 2005
பௌதிக இரசாயனம்
PHYSICAL CHEMISTRY
ஆசிரியர் திரு. N. மகேஸ்வரன்
ஆரம்பம்:19-02-2005 சனி 5.30 p.m.
(42220)




EXPOAIR your friend in the skies...
எக்ஸ்போ எயார் வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.